21st March 1955]

SRI K. T. RAJU :—" உதவி சபாநாயகர் அவர்களே 50 பேர் உட்கார வேண்டிய பஸ்ஸில் 75 பேர் உட்கார்ந்துகொண்டும், நின்றுகொண்டும் போகிறார்கள் : அவர்களுக்கு டிக்கட் கண்டக்டர் ஒருவரினால் கொடுப்பது கஷ்டமாக இருக்கிறது. இரண்டு கண்டக்டர்களையாவது, அப்பேர்ப்பட்ட பஸ்ஸுகளில் நியமிக்கவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறேன். அதைப் பற்றி மந்திரியார் அவர்கள், யாதொருவிதமான பதிலும் சொல்லவில்லை."

THE HON. SRI B. PARAMESWARAN :—" இரண்டு கண்டக்டர்கள் வேலை செய்யுமிடத்தில் ஒரு கண்டக்டர் வேலை செய்வதாக சர்க்காரும் நினைக்கிறது. இரண்டு மூன்று மாதம் கழித்து, நான்கூட பஸ் பிரயாணம் செய்து பார்த்து, கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னதை கவனிக்கிறேன்."

* **SRI K. T. RAJU** :—" கனம் மந்திரியார் அவர்கள் நான் சொன்னதைப்பற்றி பரிசீலனை செய்வதாக வாக்குறுதி கொடுத்ததால் நான் பிரேரேபித்த வெட்டுப் பிரேரேபணையை வாபஸ் வாங்கிக்கொள்ளுகிறேன்."

The cut motion was, by leave, withdrawn.

DEPUTY SPEAKER :—" The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 27,61,100 under Demand XXXIX—Capital Outlay on Road Transport Schemes.' "

The Demand was put and carried and the Grant was made.

(4) DEMAND IX—HEAD OF STATE, MINISTERS AND HEADQUARTERS STAFF.

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Mr. Deputy Speaker, Sir, on the recommendation of the Governor, I beg to move—

'That the Government be granted a sum not exceeding Rs. 75,27,100 under Demand IX—Head of State, Ministers and Headquarters Staff.' "

DEPUTY SPEAKER :—" Demand moved—

'That the Government be granted a sum not exceeding Rs. 75,27,100 under Demand IX—Head of State, Ministers and Headquarters Staff.' "

SRI M. KALYANASUNDARAM :—" Sir, I move—

'That the allotment of Rs. 75,27,100 under Demand IX—Head of State, Ministers and Headquarters Staff be reduced by Rs. 100.' "

The cut motion was duly seconded.

DEPUTY SPEAKER :—" Cut motion moved—

'That the allotment of Rs. 75,27,100 under Demand IX—Head of State, Ministers and Headquarters Staff be reduced by Rs. 100.' "

* **SRI P. CHELLATHURAI** :—" Point of order. சபா நாயகர் அவர்களே, இந்த Demand பொருள்பற்றி பல அங்கத்தினர்கள்

[Sri P. Chellathurai] [21st March 1955

പേച വിരുംപുകിരുർകൾ. പൊതു വിവാദത്തിൽ വിട്ടുപ്പോന വിഷയങ്കളേ എടുത്തുച് ചൊല്ലുവതുക്കു ഇരുക്കിറ ഒരു വായ്പ്പു ഇന്ത ചപ്ജെക്ട് ആകും. ആകവേ കനം മന്ത്രിരിയവർകൾ കുറൈന്തതു 5 മണി നേരമാവതു ഇന്ത വിവാദത്തിക്കു ഒതുക്കവേണ്ടുമെന്നു കേട്ടുക്കൊള്ളുകിറേൻ."

THE HON. SR C. SUBRAMANIAM :—" ഇന്ത വിവാദം മുക്കിയമെന്നു ഉണർന്തുതാൻ ½ മണി നേരം അതികമാക, അതാവതു മൊത്തം 3½ മണി നേരമാക വിവാദത്തിക്കു കൊടുക്കപ്പട്ടിരുക്കിറതു."

11-55 a.m. SRI T. C. NARAYANAN NAMBIAR :—" ബഹുമാന്യനായ ഉപസഭാപതിയവർകളെ, കഴിഞ്ഞ തവണ ഞാൻ മലയാളത്തിൽ സംസാരിച്ചതു മുഴുവൻ ബഹുമാനപ്പെട്ട ധനകാര്യമന്ത്രിക്കു മനസ്സിലായിയെന്ന് അദ്ദേഹംതന്നെ സമ്മതിക്കുകയും ഞാൻ ഉന്നയിച്ചിരുന്ന കാര്യങ്ങൾക്ക് ഏതാണ്ടു ശരിയായി മറുപടി പറയുകയും ചെയ്തതു കൊണ്ടു മലയാളത്തിൽ പറഞ്ഞാലും അദ്ദേഹം സംഗതികൾ മനസ്സിലാക്കുന്നുണ്ടെന്നു ഞാൻ വിചാരിക്കുന്നു. വക്കെ ഞങ്ങളെ സംബന്ധിച്ചു പറയുകയാണെങ്കിൽ ഇവിടെ ബഹുമാനപ്പെട്ട മന്ത്രിമാരും മററുള്ളവരും തമിഴിൽ പറയുന്നതു മുഴുവൻ ഞങ്ങൾക്കു മനസ്സിലാകുന്നില്ല.

" ഈ ഡിമാണ്ടിന്നു ബഹുമാനപ്പെട്ട മെമ്പർ ശ്രീ കല്യാണസുന്ദരം ഇവിടെ അവതരിപ്പിച്ച ഖണ്ഡനോപക്ഷേപത്തെ ഞാൻ അനുകൂലിക്കുന്നു. ഖണ്ഡനോപക്ഷേപത്തെ പിന്താങ്ങിക്കൊണ്ടു രണ്ടുമൂന്നു പ്രധാനപ്പെട്ട കാര്യങ്ങൾ ഗവമ്മേണ്ടിന്റെ ശ്രദ്ധയിൽപ്പെടുത്താനാണ് ഞാൻ ആഗ്രഹിക്കുന്നതു്. ഒന്നാമതായി എനിക്കു പറയുവാനുള്ളതു് ഭാഷാപ്രശ്നത്തെ സംബന്ധിച്ചാണ്. ബില്ലുകൾ തമിഴിലും മലയാളത്തിലും അച്ചടിച്ചു കൊടുക്കുന്ന ഏപ്പാടു് ഗവമ്മേണ്ടു് ഉടനുണ്ടായിട്ടുണ്ടെന്നു ഞാൻ മനസ്സിലാക്കുന്നു. ഈ സഭയിൽ ബഹുമാനപ്പെട്ട മെമ്പർമാർ തമിഴിൽ ചോദിക്കുന്ന ചോദ്യങ്ങൾക്കു തമിഴിൽതന്നെ ഉത്തരം പറയുക എന്ന സമ്പ്രദായവും മന്ത്രിമാർ സ്വീകരിച്ചിട്ടുണ്ടെന്നു ഞാൻ മനസ്സിലാക്കുന്നു. അതേസമയം ഗവമ്മേണ്ടിന്റെ പൊതുനയത്തെപ്പററിയുള്ള കാര്യങ്ങൾ പറയുന്നതു് ഇംഗ്ലീഷിലായിരിക്കണമെന്ന തത്വവും സ്വീകരിച്ചുകഴിഞ്ഞിട്ടുണ്ട്. ഈ ഭാഷാപ്രശ്നം കൈകാര്യംചെയ്യുന്ന വിഷയത്തിൽ ഗവമ്മേണ്ടു് കൂടുതൽ ശ്രദ്ധചെലുത്തേണ്ടതായിട്ടുണ്ടെന്നാണ് എന്റെ അഭിപ്രായം. കോടതികളിൽ അതാതു പ്രദേശത്തുള്ള ഭാഷ ഉപയോഗിക്കുകയാണെങ്കിൽ നാട്ടുഭാഷകൾക്കു വമ്പിച്ച പ്രാധാന്യം ലഭിക്കുന്നതാണ്. ഇന്നു കലാശാലകളിലെ പ്രബോധനഭാഷ ഇംഗ്ലീഷ്തന്നെ ആയിരിക്കണമെന്നു ഒരു കൂട്ടർ ശാഠ്യംപിടിക്കുന്നുണ്ട്. അതേസമയം വിദ്യാഭ്യാസരംഗത്തു പേരെടുത്ത പ്രമുഖന്മാരായിട്ടുള്ള ചില ആളുകൾ, പഴയ ഒരു പാരമ്പര്യത്തിൽ കുത്തിപ്പിടിച്ചു നിന്നുകൊണ്ടു് ചില വിദ്യാഭ്യാസധുരന്ധരന്മാരും മററു ചിലരും, തങ്ങൾ മാനിക്കുന്ന ചില പഴഞ്ചൻ തത്വങ്ങളുടെയും ആശയങ്ങളുടെയും അടിസ്ഥാനത്തിൽ അദ്ധ്യയനഭാഷ ഇംഗ്ലീഷ്തന്നെയായിരിക്കണമെന്ന് വാശിപിടിച്ചു വാദിച്ചുകൊണ്ടിരിക്കുന്നു. ബഹുമാനപ്പെട്ട മന്ത്രിമാർ പല പൊതുവേദികളിലായി നാട്ടുഭാഷയെ സംബന്ധിച്ചു ചെയ്തിട്ടുള്ള പ്രഖ്യാപനങ്ങളനുസരിച്ചു നാട്ടുഭാഷയ്ക്കു് പ്രാധാന്യം കൊടുക്കണമെന്നുണ്ടെങ്കിൽ കോടതികളിൽ നാട്ടുഭാഷതന്നെ കൈകാര്യം ചെയ്യേണ്ടതാണ്. ഇതു് പ്രത്യേകം എടുത്തുപറയുന്നതിന്നു എന്നെ പ്രേരിപ്പിച്ചതു് എന്റെ അനുഭവമാണ്. ഇന്നു പാട്ടുകോടതികളിലും മററും നാട്ടുകാരു തങ്ങളുടെ കാര്യം നാട്ടുഭാഷയിൽതന്നെ പറയാൻ സന്ദർഭം ലഭിക്കാത്തതുകൊണ്ടു് വളരെ ബുദ്ധിമുട്ടുണ്ട്.

" ഭാഷാസംസ്ഥാനകാര്യത്തെക്കുറിച്ചാണ് ഖണ്ഡനോപക്ഷേപം. ഇതു് നമ്മുടെ സംസ്ഥാനഗവമ്മേണ്ടിന്റെ അധികാരപരിധിയിൽപ്പെട്ട ഒരു കാര്യമല്ലെന്നു ഞാൻ മനസ്സിലാക്കുന്നുണ്ട്. നാം എത്രതന്നെ ആഗ്രഹിച്ചാലും ഭാഷാസംസ്ഥാനങ്ങൾ രൂപീകരിക്കുന്നതിന്നു നാം മാത്രം വിചാരിച്ചാൽ പോര. അതു ചെയ്യേണ്ടതു കേന്ദ്രഗവമ്മേണ്ടാണ്. എന്നാൽ ഈ സംസ്ഥാനഗവമ്മേണ്ടിന്റെതന്നെ അധികാരപരിധിയിൽപ്പെട്ട ചില കാര്യങ്ങളുണ്ട്. ഞാൻ ഒരുദാഹരണം പറയാം. തെക്കൻ കന്നടകജില്ലയിലെ കാസർഗോഡ് താലൂക്കിലേയും നീലഗിരി ജില്ലയിലെ ഗൂഡലൂർ താലൂക്കിലെയും കുറേ ഭാഗങ്ങൾ മലബാർ കുടിയാന്മനിയമം ബലത്തിലുള്ള പ്രദേശങ്ങളാണ്. ആ പ്രദേശങ്ങളിലെ ഭാഷ മലയാളമാണ്. മിക്കവാറും എല്ലാ കാര്യത്തിലും അവ മലബാറിന്നു തുല്യമാണ്. ആ പ്രദേശങ്ങളെ മലബാർ ഡിസ്ട്രിക്ടിനോടു കൂട്ടിച്ചേർത്തു മലയാളഭാഷ സംസാരിക്കുന്ന പ്രദേശങ്ങളെല്ലാം ഉൾപ്പെട്ട ഒരു മലയാളജില്ല രൂപീകരിച്ചാൽ തീർച്ച

21st March 1955] [Sri T. C. Narayanan Nambiar]

യായിട്ടും അതൊരു നല്ല കാര്യമായിരിക്കും. ഭരണപരമായി അതുകൊണ്ടു പല സൌകര്യങ്ങളുമുണ്ടാകും. അതു് ഈ ഗവമ്മേണ്ടിന്റെതന്നെ അധികാരപരിധിയിൽപെട്ടതാണു്. അതു ചെയ്യുന്നതിന്നു യാതൊരു തടസ്സവുമില്ല.

"മറ്റൊരു കാര്യം എനിക്കു് പറയാനുള്ളതു് മന്ത്രിമാരുടെ വർത്തനത്തെക്കുറിച്ചാണു്. ഞാൻ മനസ്സിലാക്കുന്നുണ്ടു് നമ്മുടെ മന്ത്രിമാർ രാജ്യം മുഴുവൻ സഞ്ചരിച്ചു ജനങ്ങളോടു് നേരിട്ടു സമ്പർക്കം പുലർത്തുകയും, ജനങ്ങൾക്കു് പറയാനുള്ളതു് അറിയുകയും, ജനങ്ങളെ അറിയിക്കേണ്ടതു് അറിയിക്കുകയും ചെയ്യുക എന്നതു് ഒരു നല്ല വഴക്കമാണെന്നു് പക്ഷെ മന്ത്രിമാരുടെ ഈ വർത്തനങ്ങൾ കക്ഷികാര്യങ്ങൾക്കുവേണ്ടി വിനിയോഗിക്കുന്നതു് ശരിയല്ലെന്നും ഞാൻ മനസ്സിലാക്കുന്നു. മന്ത്രിമാരുടെ പേരിൽ ഒരു ആരോപണം കൊണ്ടുവരണമെന്നുള്ള ഉദ്ദേശത്തോടുകൂടിയല്ല ഞാനിതു പറയുന്നതു്. വളരെ വേദനാജനകമായ ഒരു കാര്യം ചൂണ്ടിക്കാണിക്കുക മാത്രമാണു് എന്റെ ഉദ്ദേശം. നമുക്കു് ഒരു മുഖ്യമന്ത്രിയുണ്ടു്. ബഹുമാനപ്പെട്ട ശ്രീ കാമരാജനാടാർ. ഗവമ്മേന്റിന്റെ നയത്തെസംബന്ധിച്ചു അദ്ദേഹം (ചിദംബരത്തുവച്ചാണെന്നു തോന്നുന്നു) ചെയ്ത ഒരു പ്രസ്താവന ഞാൻ ഇന്നത്തെ പത്രത്തിൽ വായിക്കുകയുണ്ടായി. എല്ലാ ദിവസവും അദ്ദേഹം പ്രസംഗങ്ങൾ നടത്തുന്നുണ്ടു്. അതു നല്ലതുതന്നെ. എനിക്കു് അതിൽ ആക്ഷേപമില്ല. എങ്കിലും ഒന്നു പറഞ്ഞുകൊള്ളട്ടെ. നമ്മുടെ സംസ്ഥാനത്തെ സംബന്ധിച്ചിടത്തോളം ഏററവും പ്രാധാന്യമർഹിക്കുന്ന മഹീയസ്സായ ഒരു സ്ഥാപനമാണു് ഈ അസെംബ്ലി. ബഹുമാനപ്പെട്ട മുഖ്യമന്ത്രി ഈ അസെംബ്ലിയിലേക്കു് തിരഞ്ഞെടുക്കപ്പെട്ടിട്ടുള്ള ഒരു മെമ്പറാണു്. കൂടാതെ അദ്ദേഹം നമ്മുടെ മുഖ്യമന്ത്രിയുമാണു്. അദ്ദേഹത്തിനു ചുമതലകളുണ്ടു്. മന്ത്രിസഭയ്ക്കു കൂട്ടുത്തരവാദിത്വമാണു്, അതുകൊണ്ടു് ഏതു മന്ത്രിക്കും ഏതു വകുപ്പും കൈകാര്യം ചെയ്യാനുള്ള അവകാശമുണ്ടു് എന്ന വാദം ഞാൻ വിസ്മരിക്കുകയല്ല. ഇവിടെ ഈ അസെംബ്ലി ചർച്ചകൾക്കിടയ്ക്കു ഉത്തരവാദിത്വം ചെലുത്തി നടത്തിക്കൊണ്ടിരിക്കയാണു്. രാജ്യത്തിന്റെ എല്ലാ ഭാഗത്തുനിന്നുമുള്ള ജനപ്രതിനിധികൾ ഇവിടെ സമ്മേളിച്ചു് ഭരണകാര്യങ്ങളെക്കുറിച്ചും ജനങ്ങളുടെ ആവശ്യങ്ങളെക്കുറിച്ചും സംസാരിച്ചുകൊണ്ടിരിക്കുകയാണു്. മുഖ്യമന്ത്രി ഇങ്ങനെ വർത്തനം നടത്തിക്കൊണ്ടിരിക്കുന്നതോടൊപ്പം തന്നെ ഈ അസെംബ്ലിയിൽ വന്നിട്ടുണ്ടു് ഈ സഭയേയും ഈ സഭയിലെ അംഗങ്ങളേയുംകൂടി ഒന്നു് ആദരിക്കാനുള്ള ഔദാര്യം അദ്ദേഹത്തിനില്ലാതെ പോയതു് വളരെ വേദനാജനകമാണെന്നു പറയുമ്പോൾ അതിനെ ഒരു കുററം പറച്ചിലായോ ആരോപണമായോ ആരും കരുതുകയില്ലെന്നു ഞാൻ വിശ്വസിക്കുന്നു. ആത്മാർത്ഥമായ വേദനകൊണ്ടു് പറഞ്ഞുപോവുകയാണു്."

THE HON. SRI C. SUBRAMANIAM :—"Sir, as far as the Assembly is concerned the Leader of the House is the person responsible for the conduct of the business and he represents the entire Government as such. Therefore I do not think the hon. Member can find fault with the Hon. the Chief Minister for not being present here throughout the discussions or throughout the session."

SRI T. C. NARAYANAN NAMBIAR :—"സർ, ഞാൻ കുററം പറയുകയാണെന്നു തെററിദ്ധരിക്കുകയില്ലെന്നു വിശ്വസിക്കുന്നു. ഒരു തെററു് ചൂണ്ടിക്കാണിക്കുക മാത്രമാണു് എന്റെ ഉദ്ദേശം. ഈ അസെംബ്ലി നടന്നുകൊണ്ടിരിക്കുമ്പോൾ ഈ സഭയിൽ വന്നിരിക്കുവാനുള്ള കടമ നമ്മുടെ മുഖ്യമന്ത്രിക്കുണ്ടു്. ഇന്നുതന്നെ നോക്കുക. ഇപ്പോൾ ഇവിടെ ചർച്ചചെയ്തുകൊണ്ടിരിക്കുന്നതു മുഖ്യമന്ത്രിയുടെ പോർട്ട്ഫോളിയോയിൽ പെട്ട ഒരു പ്രധാന വകുപ്പിനുവേണ്ടിയുള്ള ഡിമാൻറാണു്. എന്നിട്ടുപോലും ഈ സഭയിൽ വന്നിരിക്കാനുള്ള ദയവു് അദ്ദേഹത്തിനുണ്ടായില്ല. അതാണു് സർ, എന്റെ സങ്കടം.

"ബഹുമാനപ്പെട്ട ഉപസഭാനാഥൻ അവർകളെ, ഒരു കാര്യം ഞാൻ സമ്മതിക്കുന്നു. അതു മറച്ചുവച്ചിട്ടു കാര്യമില്ല. ഏതു പാർട്ടിയിൽപെട്ടവരായാലും അവരുടെ പാർട്ടിക്കു വേണ്ടി പ്രവർത്തിക്കുമെന്നുള്ളതു സ്വാഭാവികമാണു്. കമ്മ്യൂണിസ്റ്റു മന്ത്രിമാരും എം.എൽ.എ.–മാരുമുണ്ടെങ്കിൽ അവർ കമ്മ്യൂണിസ്റ്റ്പാർട്ടിക്കുവേണ്ടി പ്രവർത്തിക്കും. കോൺഗ്രസ്സ്പാർട്ടിയിൽപെട്ട എം. എൽ. എ.–മാരും മന്ത്രിമാരും കോൺഗ്രസ് പാർട്ടിക്കുവേണ്ടി പ്രവർത്തിക്കുന്നു. പക്ഷെ മന്ത്രിസ്ഥാനത്തിരിക്കുന്നവർ പൊതുമുതൽ ഉപയോഗ

[Sri T. C. Narayanan Nambiar] [21st March 1955

പ്പെടുത്തിക്കൊണ്ടും തങ്ങൾ ഏതു സ്ഥാനത്തിരിക്കുന്നുവോ ആ സ്ഥാനത്തിന്റെ സ്വാധീന ശക്തിയെ ചൂഷണംചെയ്യുകൊണ്ടും സ്വന്തം പാർട്ടിയെ ബലപ്പെടുത്തുകയും മററു പാർട്ടികളെ അലോസരപ്പെടുത്തുകയും ചെയ്യുന്നതു് ശരിയാണോ, ഭംഗിയാണോ എന്നു് ആലോചിക്കേണ്ടതുണ്ടു്. ബഹുമാനപ്പെട്ട മുഖ്യമന്ത്രി താമസിയാതെ വീണ്ടും മലബാർ സന്ദർശിക്കുന്നതാണെന്നു് മാർച്ച് 8-ാം തിയ്യതിയിലെ ഒരു പത്രപ്രസ്താവനയിൽ കണ്ടു. അദ്ദേഹം മലബാറിൽ ഒരു പ്രാവശ്യം വന്നിട്ടുണ്ടു്. ഇനിയും വരണം. അദ്ദേഹത്തിനു ഞങ്ങളുടെ അകമഴിഞ്ഞ സ്വാഗതമുണ്ടു്. അദ്ദേഹം നമ്മുടെ മുഖ്യമന്ത്രിയാണു്. പക്ഷെ ഒരു കാര്യം ചൂണ്ടിക്കാണിച്ചുകൊള്ളട്ടെ. മലബാറിന്റെ പ്രശ്നങ്ങൾ നേരിട്ടു അന്വേഷിക്കാനും പഠിക്കാനുമാണു് അദ്ദേഹം മലബാറിൽ വരുന്നതെന്നു പറഞ്ഞിരുന്നെങ്കിൽ ഞങ്ങൾ സന്തോഷിക്കുമായിരുന്നു. അദ്ദേഹത്തെ അഭിനന്ദിക്കുമായിരുന്നു. മലബാറിലെ തൊഴിലില്ലായ്മയെപ്പററി, പട്ടിണിയെപ്പററി, പട്ടിണിമരണങ്ങളെപ്പററി, പകർച്ചവ്യാധികളെപ്പററി, ആത്മഹത്യകളെപ്പററി മററും എണ്ണമററ പ്രശ്നങ്ങളെപ്പററി അന്വേഷിക്കാനാണു് അദ്ദേഹം വരുന്നതെന്നു പറഞ്ഞിരുന്നെങ്കിൽ ഞങ്ങൾ അതീവ സന്തുഷ്ടരാകുമായിരുന്നു. അതിൽ ഞങ്ങൾ ആശ്വാസംകൊള്ളുമായിരുന്നു. പക്ഷെ അതിനൊന്നുമല്ല അദ്ദേഹം അവിടെ വരുന്നതു്. ആന്ധ്രയിൽനിന്നുള്ള പാഠങ്ങൾ മനസ്സിലാക്കിക്കൊണ്ടു് മലബാറിലെ കമ്യൂണിസ്റ്റ് പാർട്ടിയെ തുടച്ചുനീക്കാൻ താൻ മലബാറിലേക്കു പോകുന്നുണ്ടെന്നാണു് അദ്ദേഹം പറഞ്ഞതു്. ഈ അവസരത്തിൽ ഞാൻ ഒന്നു പറഞ്ഞുകൊള്ളട്ടെ. കാമരാജനാടാരല്ല, പണ്ഡിററു് നെഹ്റുവല്ല, സാക്ഷാൽ ഉടയതമ്പുരാൻതന്നെ അവതാരമെടുത്തു വന്നാലും ശരി, പാർട്ടി ഏതുമായിക്കൊള്ളട്ടെ, ആ പാർട്ടി പൊതുജനങ്ങളെ സേവിക്കുകയും ശുശ്രൂഷിക്കുകയും ചെയ്യുന്ന കാലത്തോളം, നാട്ടിനും നാട്ടുകാർക്കുംവേണ്ടി പ്രവർത്തിക്കുന്നിടത്തോളം കാലം ആ പാർട്ടിയെ നശിപ്പിക്കാൻ ആർക്കും സാദ്ധ്യമല്ല, അതുകൊണ്ടു കമ്യൂണിസ്റ്റ് പാർട്ടിക്കു് ശ്രീ കാമരാജനാടാർ മലബാറിൽ വരുന്നതിനെപ്പററി യാതൊരാക്ഷേപവുമില്ല, ഭയവുമില്ല, പക്ഷെ ഈ രാജ്യത്തിന്റെ മുഖ്യമന്ത്രി പൊതുമുതൽ വ്യയംചെയ്തുകൊണ്ടു് കക്ഷിപ്രചരണത്തിനുവേണ്ടി ചുററി നടക്കുന്നതു് ശരിയായ ഒരു നയമല്ല. അതിനെയാണു് ഞങ്ങൾ ആക്ഷേപിക്കുന്നതു്.

"ഇനി ഈ ഡിമാൻറിൽ വകയിരുത്തിയിട്ടുള്ള ചില ഇനങ്ങളെപ്പററി ചിലതു പറയണമെന്നുദ്ദേശിക്കുന്നു. Director of Statistics—എന്ന ഇനത്തിൽ 2,30,000 ക. യാണു് നീക്കിവച്ചിട്ടുള്ളതു്. കൈത്തറികളെ സംബന്ധിച്ചുള്ള സ്ഥിതിവിവരക്കണക്കു ശേഖരിക്കുന്നതിനു് 76,000 ഉറുപ്പികയും നീക്കിവച്ചിട്ടുണ്ടു്. രണ്ടിനത്തിലുംകൂടി 3,06,000 ക. ആണു് വച്ചിട്ടുള്ളതു്. ഈ സാംഖ്യ വളരെ കുറഞ്ഞുപോയി എന്നാണു് എന്റെ അഭിപ്രായം: കർഷകന്റെ ഉല്പാദനച്ചെലവു് തിട്ടപ്പെടുത്തുന്നതിനുവേണ്ടി നീക്കിവച്ചിട്ടുള്ളതു 8,000 ക. ആണു്. ഈ ഇനങ്ങളിലെല്ലാം കൂടുതൽ തുക നീക്കിവയ്ക്കേണ്ടതായിരുന്നു എന്നാൽ വളരെ വ്യസനകരമായിട്ടുള്ള മറെറാരു കാര്യമുണ്ടു്. അതായതു് മനുഷ്യരെ സംബന്ധിച്ചുള്ള സ്ഥിതിവിവരക്കണക്കുകൾ (Vital Statistics), ശേഖരിക്കുന്നതിനുവേണ്ടി യാതൊരു നടപടിയും ഈ ഗവർമ്മേണ്ടു് ഇതുവരെ എടുത്തതു കാണുന്നില്ല. ബഡ്ജററിൽ നാമമാത്രമായ ഒരു തുക കൊള്ളിച്ചുകാണുന്നുണ്ടു്. ഈ രാജ്യത്തു ലക്ഷക്കണക്കിനുള്ള മലവാസികളും ആദിവാസികളുമുണ്ടു് ഈ രാജ്യത്തു അനേകലക്ഷം ആദിവാസികളാണുള്ളതെന്നു ഒരു റിപ്പോർട്ടിൽ കാണുന്നു. അതിൽ കൂടുതലുണ്ടെന്നാണു് എന്റെ വിശ്വാസം. മലബാറിൽ കുറിച്ചിയർ, മാവിലർ, പണിയർ മുതലായ പേരുകളിൽ അറിയപ്പെടുന്ന അസംഖ്യം ആദിവാസികളുണ്ടു്. അന്യർക്കുവേണ്ടി കൃഷിപ്പണിചെയ്യുകയാണു് അവരുടെ പ്രധാന തൊഴിൽ. അവരുടെ ജീവിതം വളരെ കഷ്ടമാണു്. അവരുടെയിടയിൽ ഒരു അന്ധവിശ്വാസമുണ്ടു്. ഒരു കുടുംബത്തിൽ ഒരാൾ മരിച്ചുപോയാൽ പിന്നെ അവർ ആ നാട്ടിൽ നില്ക്കുകയില്ല. ഉടൻ നാടുവിട്ടു വല്ല ദിക്കിലേയ്ക്കും പോവുകയായി. ഈ അന്ധവിശ്വാസത്തിൽനിന്നു മുതലെടുക്കുന്നതു് ജന്മിമാരാണു്. അവർക്കു വല്ല വീടോ പറമ്പോ ഉണ്ടായിരുന്നാൽ ഈ തക്കം നോക്കി ജന്മി അതിനെ കരസ്ഥമാക്കും. അവർക്കു് വിദ്യാഭ്യാസം നൽകുന്നതിനു വേണ്ടിയോ, വൈദ്യസഹായം നൽകുന്നതിനുവേണ്ടിയോ വീടുണ്ടാക്കിക്കൊടുക്കുന്നതിനുവേണ്ടിയോ എന്തെങ്കിലും നീക്കിവക്കാതിരുന്നതു് വളരെ വ്യസനകരമായിട്ടുള്ള ഒരു സംഗതിയാണു്. അവരെ സംബന്ധിച്ചു കണക്കുകൾ ശേഖരിക്കുന്നതിനുപോലും ഈ ഗവർമ്മേണ്ടു് യാതൊരു ശ്രമവും ചെയ്യുകാണുന്നില്ല. ആദിവാസികളെ ഉദ്ധരിക്കുന്നതിനുള്ള പ്രവർത്തനങ്ങൾക്കുവേണ്ടി മൂന്നു ലക്ഷം ഉറുപ്പിക കേന്ദ്രഗവർമ്മേണ്ടിൽനിന്നു ഗ്രാൻറായി കിട്ടുന്നതാണെന്നു അറിയുന്നു. ഈ

21st March 1955] [Sri T. C. Narayanan Nambiar]

സംസ്ഥാനത്തു ആദിവാസികൾ വളരെയുള്ളതുകൊണ്ടു് കൂടുതൽ ഗ്രാൻറ് കിട്ടാനുള്ള ഒരു ശ്രമം നടത്തണം. അതു കൂടാതെ സംസ്ഥാനഗവമേണ്ടും ഗണ്യമായ ഒരു തുക അതിനുവേണ്ടി നീക്കിവക്കേണ്ടതായിരുന്നു എന്നാണ് എന്റെ അഭിപ്രായം.

"മാന്യനായ ഉപസഭാനാഥൻ അവർകളെ, ഈ പല കമ്മിററികളും നിലവിലുണ്ടു്. പരിയാരം ടി. ബി. സാനിട്ടോറിയത്തിനു് ഒരു കമ്മിററിയുണ്ടു്. ആസ്പത്രി കമ്മിററികളുണ്ടു്. ഫോറസ്റ്റ് അഡ്വൈസറി കമ്മിററികളുണ്ടു്. ഹരിജൻ വെൽഫെയർ കമ്മിററികളുണ്ടു്. മററും എത്രയോ കമ്മിററികളുണ്ടു്. ഈ കമ്മിററികളിലൊന്നിലുംതന്നെ സാധാരണയായി പ്രതിപക്ഷത്തുള്ള ആളുകളെ ഉൾപ്പെടുത്തിക്കണ്ടിട്ടില്ല. എന്താണ് ഇതിനു കാരണമെന്നു എനിക്കു മനസ്സിലാക്കാൻ കഴിഞ്ഞിട്ടില്ല. ഇവിടെ വിവിധ പാർട്ടികളുണ്ടു്. ഭിന്നങ്ങളായ അഭിപ്രായങ്ങളും ആദർശങ്ങളും വീക്ഷണഗതികളും പ്രവർത്തനപരിപാടികളുമുള്ള പാർട്ടികൾ ഇവിടെയുണ്ടു്. അവരുടെയെല്ലാം അഭിപ്രായം അറിഞ്ഞുകൊണ്ടു കൂടുതൽ സുഗമവും കാര്യക്ഷമവുമായ രീതിയിൽ കാര്യങ്ങൾ നടത്തുന്നതിനു പ്രതിപക്ഷത്തിലെ ആളുകളെക്കൂടി ഈ കമ്മിററികളിൽ ഉൾപ്പെടുത്തേണ്ടതായിരുന്നു. ഈ കമ്മിററികളിൽ അതതു നിയോജകമണ്ഡലത്തിലെ എം. എൽ. എ. മാരെക്കൂടെ ഉൾപ്പെടുത്താനെന്താണ് തടസ്സം? ആസ്പത്രി കമ്മിററിയെപ്പററി പറയുകയാണെങ്കിൽ എന്റെ നിയോജകമണ്ഡലത്തിൽ ആ പ്രശ്നമേ ഇല്ല. മററുള്ള സ്ഥലങ്ങളിലൊന്നും പ്രതിപക്ഷത്തുള്ള ആളുകളെ ആരെയും എടുത്തുകാണുന്നില്ല.

"ഗവമേണ്ടിലേക്കു അയയ്ക്കുന്ന കത്തുകൾക്കും ഹരജികൾക്കും സമയത്തു ഒരു മറുപടി കൊടുക്കുന്ന കാര്യത്തിലും ഭരണത്തിന്റെ ഗതി ശീഘ്രതരമാക്കുന്ന കാര്യത്തിലും മന്ത്രിമാർ ശ്രദ്ധചെലുത്തിയതായിട്ടുള്ളതായി മനസ്സിലാക്കാൻ കഴിഞ്ഞിട്ടില്ല. കുറച്ചുകൂടെ ഊർജ്ജിതവും ചൊറുചൊറുക്കും ഭരണത്തിനു ഉണ്ടാകേണ്ടിയിരിക്കുന്നു."

DEPUTY SPEAKER :—"The hon. Member's time is up."

SRI T. C. NARAYANAN NAMBIAR :—"Sir, I request I may be given some more time as I am initiating the discussion on the cut motion."

DEPUTY SPEAKER :—"Let him finish in two more minutes."

* SRI A. RAMASAMI TEVAR :—"On a point of order, Sir. With due respect to the Chair I submit that when I was speaking on the Local Administration demand, the Chair did not allow me to proceed even a minute longer than the time allowed. Now, the hon. Member was allowed two more minutes . . ."

DEPUTY SPEAKER :—"Because the hon. Member is intiating the discussion, I have allowed him 15 minutes. The hon. Member has one more minute."

SRI T. C. NARAYANAN NAMBIAR :—"The hon. Member by interrupting me has taken away one minute, Sir."

"അനാവശ്യമായും അനവധാനമായും ഗവമേണ്ടു് പലതും ചെയ്യുവരുന്നതായി കാണുന്നുണ്ടു്. ചില ഉദാഹരണങ്ങൾ പറയാം. ബൊബ്ബിലിയൂണിററ് എന്നൊരു യൂണിററ് ഇന്നും നിലവിലുണ്ടു് 1953-ൽ ആന്ധ്രാ സംസ്ഥാനം പിരിഞ്ഞുപോയിട്ടും ഇതിനെ വച്ചുകൊണ്ടിരിക്കുന്നതു് എന്തിനെന്നു മനസ്സിലാവുന്നില്ല. അതിന്റെ റിപ്പോർട്ടിനുവേണ്ടി ആയിരക്കണക്കിൽ ഉറുപ്പിക ഇപ്പോഴും ഗവമേണ്ടു് ചെലവാക്കിക്കൊണ്ടിരിക്കുകയാണ്. വ്യവസായവകുപ്പിൽ അസിസ്റ്റൻറ് ഡയറക്ടർ ഓഫ് ഇൻഡസ്ട്രീസ് എന്നൊരു ഉദ്യോഗമുണ്ടായിരുന്നു. ഒരു സുപ്രഭാതത്തിൽ ഗവമേണ്ടു് അതു വേണ്ടെന്നുവച്ചു. ഒട്ടും താമസിച്ചില്ല, പററെ ദിവസംതന്നെ, ഡിപ്യൂട്ടി ഡയറക്ടർ ഓഫ് ഇൻഡസ്ട്രീസ് എന്നൊരു ഉദ്യോഗം സൃഷ്ടിച്ചു് അതേ ആളെത്തന്നെ ആ ഉദ്യോഗത്തിൽ നിയമിച്ചു. ഒരു പ്രത്യേക വ്യക്തിയെപ്പററിയല്ല ഞാൻ പറയുന്നതു്. ഒരു ഉദ്യോഗം

[Sri T. C. Narayanan Nambiar] [21st March 1955

ஒரு தினம் வேண்டுமென்று தீர்மானிக்கவும் அடுத்த தினமன்றே வேண்டுமென்று தீர்மானிக்கவும் எனுமளவாயென்றாவே எனக்கு மனஸிலாகாதது. ஸபமேண்டு ஆலோசனகூடாதெ ப்ரவர்த்திக்குன்றதினு இங்னெ வல உதாஹரணங்ளுமுண்டு. தன்னிமித்தம் வளரெ வணம் செலவாகுபோகுன்னுண்டு. வ்யர்த்தமாயிப்போகுன்னுண்டு."

12-10 p.m. * SRI P. CHELLATHURAI :—" கனம் துணைத் தலைவர் அவர்களே, சபையிலிருக்கும் அங்கத்தினருக்கு, தங்கள், தங்கள் கருத்தையும், மக்களின் குறைகள், துயரங்களையும் எடுத்துச் சொல்வதற்கான வாய்ப்பு, இதுபோன்ற மான்யத்தின்மீது பேசும்போதுதான் கிடைக்கிறது. எனவே, மிக்க தயவாகவும், தாழ்மையுடனும், கேட்டுக்கொள்ளுகிறேன். மந்திரியாரையும், துணைத் தலைவரையும் கேட்டுக்கொள்ளுகிறேன். ஒவ்வொரு அங்கத்தினருக்கும் முடியுமானால், நான்கு, ஐந்து நிமிஷங்கள் அதிகமாகப் பேச அனுமதிக்கவேண்டும். பொதுவாக அரசாங்கம் ஒவ்வொரு இலாகாவுக்கும் ஒதுக்கியிருக்கும் நிதி, அரசாங்கத்தின் பொது நிதி இருப்பின்தன்மைக்கு ஒத்தவரையில் நிர்ணயம் செய்து அளவிட்டு நிதி ஒதுக்கி இருப்பது சாலச் சிறந்தது என்பதை யாரும் மறுக்கமுடியாது. ஆனால் ஒதுக்கப்பட்ட நிதி குறிப்பிட்ட காரியத்திற்காக, குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட நபருக்கு தேவை அளவுக்கு அது போய் சேருகிறதா என்பதில் அரசாங்கம் தக்க முறையில் கண்காணிக்கவேண்டுமென்று பலமுறை பல அங்கத்தினர்கள் சொல்லி வந்திருக்கிறார்கள். அரசாங்கம் அதற்கான நடவடிக்கையை எடுத்துக்கொள்ளுமென்று நானும் நம்புகிறேன். சென்ற பொது விவாத்தின்போது, போதிய அவகாசம் கிடைக்காததால், ராமனாதபுரம் ஜில்லா, திருவாடானை தாலூக்காவின் நிலைமையைப்பற்றி அதிகமாகச் சொல்ல வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. ஒவ்வொரு இலாகாவும் சம்பந்தப்பட்டவரையில் என்னுடைய தொகுதிக்குச் செய்யவேண்டியவை அந்த இலாகாக்களுக்கு அதிகம் இருக்கிறது என்ற அளவில் சுருக்கமாக சொல்லி அவற்றை கவனமாக கனம் அமைச்சர் குழுவினர் பொதுவாகவும், தனித்தனியாகவும், ஒவ்வொருவரும் அவசியம் உணர்ந்து, பொறுப்புடன் நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையுடன் சிலவற்றைக்கூற விரும்புகிறேன். ராமனாதபுரம் ஜில்லா அதைப்பற்றி அடிக்கடிகுறுப்பிடும் போது எல்லாம் சொல்லுவது போல்—ஆந்திர மாகாணத்திலிருக்கும் ராயலசீமை அது என்பதையும், கவனிப்பாற்றற குட்டிராயல்சீமை அது என்பதை யாரும் மறுக்கமுடியாது. புள்ளி விவரங்களை போட்டுப்பார்த்தால் எந்த வகையில் அப்பிரதேசம் முன்னேற்றத்தில் இருக்கிறது, அல்லது பிற்போக்குத் தன்மையில் இருக்கிறது என்று தெரியவரும். தேசமக்கள் அடையும் துன்பத்திலும், துயரத்திலும் ராமனாதபுரம் ஜில்லா முன்னணியில் இருக்கிறது என்பதில் இரண்டு வித அபிப்பிராயம் இருக்கவேமுடியாது. ராமநாமபுரத்தின் கிழக்குப் பகுதியான, திருவாடானை முதுகளத்தூர், பரமக்குடி இவைகள் எல்லாவகையிலும் சீரழந்த நிலைமையில் இருக்கின்றன. நாட்டில் அங்கும் இங்கும் மழைபெய்து செழிப்பு ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அது ஓரளவு உண்மைதான். ஆனால் எங்கள் ராமனாதபுரம் ஜில்லாவில் திருவாடானைப் பகுதியில் வாழும் மக்களுக்கு நிரந்தரமாகப் பஞ்சம், 7, 8 ஆண்டுகளாக இருந்தது போல் இந்த ஆண்டும் அந்த மக்கள் பஞ்சத்தின் கொடுமையால் பாதிக்கப்பட்டு, வழக்கம் போல் தஞ்சை ஜில்லாவில் தஞ்சம் புகும் நிலைமையைத் தான் நான் பார்க்கிறேன். நான் முன்னர் சபையில் பேசியதுபோல் அமைச்சர் குழுவினர் மாறுவேடம் தாங்கி, விரும்பினால் இன்றே மாறுவேடம் போட்டுப்போய் அப்பிரதேசத்தைப் பர்த்தால், மக்கள், எறும்புகளைப்போல் சாரைசாரையாக, திருவாடானைத்தாலுக்காவிலிருந்து கும்பல் கும்பலாக தஞ்சை நோக்கி போவதை பார்க்கமுடியும். இதுதான், சுறுக்கமாக, அத்தாலுக்காவில் இருக்கும் நிலைமை. அதோடு சுருக்கமாகச் சொல்லப்போனால் இன்றைக்கும், இந்த வினாடியும் கூட அதே நிலைமைதான் அந்த தாலுக்காவில் நீடித்துக்கொண்டிருக்கிறது என்று சொல்லிவிடலாம். இதுவே உண்மையான நிலை.

" அடுத்தபடியாக கல்வி இலாக்கா சம்பந்தமாக ஒரு விஷயம். எந்த ராஜ்யத்திலும் இல்லாத வகையில் இந்த ராஜ்யத்தில் தான், கல்வி

21st March 1955] [Sri P. Chellathurai]

இலாக்கா மந்திரியாக இருக்கும் ஸ்ரீ ஸி. சுப்ரமணியம் அவர்களை எல்லோரும் பாராட்டக்கூடிய வகையில் எட்டாம் படிகம் வரை ஏழை மாணவர்களுக்கு கட்சி வேறுபாடு இல்லாமல் ஜாதி மத இன வேறுபாடு இல்லாமல் இலவசக் கல்வி அளிக்கப்படும் என்று சர்க்கார் அறிவித்திருக்கிறார்கள். இதை எல்லோரும் வரவேற்கிறார்கள். ஆனால் ஏழை யர், பணக்காரர் யார் என்று நிர்ணயிப்பதில் பல சிக்கல்கள் ஏற்படக்கூடும். பணக்காரர்களும் கூட தங்கள் பிள்ளைகளும் இலவசமாகவே படிக்கவேண்டும் என்பதற்காகப் பலவிதமான சூழ்ச்சிகளைச் செய்து தாங்களும் ஏழைகள் என்று சொல்லிக் கொள்ளக்கூடும். அவற்றை சரியாகக் கண்காணித்து உண்மையிலேயே ஏழை மாணவர்கள் இலவசக் கல்விச் சலுகையைப் பூர்ணமாக அனுபவிக்கும்படியாக சர்க்கார் கீழே இருக்கும் அதிகாரிகளுக்கு எல்லாம் தாக்கீது கண்டிப்பாக அனுப்பவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

(Mr. Speaker in the Chair.)

" விவசாய இலாக்கா சம்பந்தப்பட்ட மட்டில் மிகவும் நல்லமுறையில் வேலை நடைபெற்று வருகின்றது. இன்னும் ஒவ்வொரு தாலுக்காவின் நிலைமையையும் நன்கு அறிந்து அதற்குத் தக்கவகையில் பணம் ஒதுக்கி விவசாயிகளுக்கு நன்மை செய்யவேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். சாதாரணமாக இன்றைக்கு அவர்கள் உழுவதற்கு உபயோகப்படுத்துகின்ற கலப்பை எப்படியிருக்கிறதென்று நம் எல்லோருக்கும் தெரியும். எனும்பும், தோலுமாக இருக்கும் மாட்டை அந்தக் கலப்பையில் கட்டி அவன் உழுகின்றபோது, முள்ளினால் கோடு கிழித்தாற் போலத்தான் இருக்கிறது. இந்த வகையிலே அவன் நிலத்தை உழுது, பயிரிட்டு, மகசூல் அறுவடை செய்யப்போகிற காலத்தில், இவன் விவசாய இலாக்காவிற்கு, உழுவதற்கு டிராக்டர் வேண்டுமென்று மனுப்போட்டிருந்தால் அதற்குப் பதில் 'டிராக்டர் வேண்டுமென்றால் இப்பொழுது கிடைக்கும்' என்று பதில் வருகிறது. இதனால் விவசாயிகளுக்கு எவ்விதமான பிரயோஜனமும் கிடையாது. நாம் விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்பதற்காகப் பணம் ஒதுக்கிவிட்டால் மாத்திரம் போதாது. அந்தப் பணம் பூராவும் விவசாயிகளுக்குக் காலாகாலத்தில் பயன்படும்படியாக அரசாங்கம். தக்க ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதிகாரிகளும் மக்களும் ஒத்துழைப்பதே கிடையாது. மக்களுக்குச் சேவை செய்ய வேண்டியதே தங்களுடைய முதலாய கடமை என்று உணர்கின்ற சர்க்கார் சிப்பந்திகள் நூற்றுக்கு இருபது பேர்கள் கூட இருக்கமாட்டார்கள். அதனால்தான் சர்க்கார் எவ்வளவு நல்லெண்ணத்தோடு விவசாயிகளுக்கு நன்மை செய்யவேண்டுமென்பதற்காகப் பணம் ஒதுக்கினாலும் கூட அந்தப் பணம் விவசாயிகளுக்குக் காலாகாலத்தில் உபயோகப்படும்படியாக அதிகாரிகள் செலவிடுவதே கிடையாது. அதனால் காங்கிரஸ்காரர்களைக் குறைகூற எதிர்க்கட்சிக்காரர்களுக்கு சில சில விஷயங்கள் கிடைத்துக் கொண்டேயிருக்கின்றன. 'காலுறையும், கையுறையும்' தாங்கிய அதிகாரிகள் சாதாரணமாக முழங்கால் மட்டும் வேஷ்டி கட்டிக்கொண்டு போகிற விவசாயிகளை மனிதர்களாகவே பார்ப்பது கிடையாது. அவர்களை அலட்சியமாக மிடுக்குத்தனமாகப் பார்க்கிறார்கள். வெள்ளைக்காரர்களுடைய ஆட்சி காலத்தில் இருந்தபடியே இந்தக்காலத்தில் நம் நாட்டு விவசாயிகளையும், தொழிலாளிகளையும் அலட்சிய பாவத்தோடேயே அதிகாரிகளில் பலர் நடத்துகிறார்கள். அவர்களிடத்தில் போய் விவசாயிகள் ஏதாவது குறைபாட்டை எடுத்துச்சொல்லிக் கொள்ளவேண்டுமென்றால் எப்படி முடியும் என்பதை நீங்களே யோசித்துப்பாருங்கள். அந்த அதிகாரிகளுடைய மனோபாவம் மாறுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எல்லாம் சர்க்கார் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். நான் ஏற்கெனவே கூறிய முறைப்படி கனம் விவசாய மந்திரி அவர்கள் மாறுவேடத்தில் சிராமப்புறங்களுக்குப் போய் இதைப் பற்றி நன்கு விசாரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

" அடுத்தாற்போல லஞ்சம் லஞ்சம் என்று ஒரேயடியாகக் கூக்குரல் போடப்படுகிறது. ஆங்கிலேயர் காலத்தில் போலீஸ்காரர்களால் அடிக்கப்

[Sri P. Chellathurai] [21st March 1955

பட்ட தழும்பு இன்னும் எப்படி வரி வரியாக இருந்து கொண்டிருக்கிறதோ அதைப் போலவே அவர்கள் காலத்தில் ஏற்பட்ட லஞ்சப் பேய் இன்னும் கோரமாகத் தாண்டவமாடிக்கொண்டேயிருக்கிறது. நமது மதிப்பிற்குரிய தலைவர் பண்டித நேரு அவர்கள் ஒரிடத்தில், 'இந்த நாட்டில் சொத்துக்கள் தனிப்பட்டவர்களுடைய உடைமைகளாக இருந்து கொண்டிருக்கும் வரையில் லஞ்சம் இருந்து கொண்டேயிருக்கும்', என்று வெகு தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நமது காங்கிரஸ் கட்சியும் கூட ஆவடி மகாநாட்டில் 'சோஷலிஸப் பாணியில் சமுதாயத்தை', அமைப்பது என்கின்ற ஒரு தீர்மானத்தை செய்திருப்பதன் காரணத்தினால் கொஞ்சம் கொஞ்சமாக நம் நாட்டிலிருந்து லஞ்சத்தையே ஒழிக்க சர்க்காருக்கு தக்கவசதி ஏற்படும் என எதிர் பார்க்கலாம். இது விஷயத்தில் ஒரு கமிட்டியை ஏற்படுத்தி இதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

"அடுத்தபடியாக பெரிய அதிகாரிகளுக்கு அதிகப்படியாகச் சம்பளம் கொடுப்பதைக் குறைக்கவேண்டும். அப்படிக் குறைத்தால்தான் சிறு சிப்பந்திகளுக்கு நல்லது. யுத்தகாலத்தில் விலைவாசி அதிகமாக இருந்ததினால் அதிகாரிகளுக்கு சம்பளத்தையும் அதிகப்படியாகவும், கிராக்கிப் படியும் அளித்தோம். அதே கிராக்கிப்படி, அதிகச் சம்பளம் இன்றைக்குக் கொடுத்துக் கொண்டு வருவது சரியல்ல. ஆகவே அதிகப்படியாகச் சம்பளம் கொடுப்பது குறைக்கப்படவேண்டும்."

12-20 p.m. * SRI M. NARAYANA KURUP :—"Mr. Speaker, Sir, I wish to speak only about one point, that is to express my disapproval of Ministers going about and collecting donations for party purposes. This is quite opposed to the code of conduct laid down in the Gorewalla Report to maintain purity of administration. I can very well imagine the arguments that might be advanced against this. I request the Hon. Ministers not to view this purely as a legal or technical question and justify their stand as if in a court of law. What prompted me to say this was just some time before the Avadi Congress Session, two donations from the Coimbatore district were ceremoniously presented to the Hon. the Chief Minister and the Hon. the Minister for Finance. One was for Rs. 78,000 and odd and the other was for about Rs. 18,000. I do not for a moment suggest that the Hon. Ministers either expressly or impliedly gave any understanding to the donors of the amount that they will have some indirect benefit ultimately. That was not and that will not be the intention of such donors is clear from the controversy that was going on with regard to the donations to the Gandhi Memorial Fund. Therefore, it is quite necessary and essential to maintain purity in administration and however great a leader might be, if he enters the ministerial office, he should not go and receive donations publicly for the benefit of his party.

"We know that our Prime Minister has been both the Prime Minister and the Congress President, but never has an instance come to my notice where he collected any amount publicly for the Congress Party. Even in matters of raising subscription to the National Plan Loan he was content with issuing his appeal and asking the people to do their duty to the country. I submit, Sir, that that is the correct approach in these matters. In this connection, I am reminded of a story connected with the rule of Dewan Ramayya. It would appear that the mother of the Maharaja grew jealous of the Dewan and complained to him that people gave more

21st March 1955] [Sri M. Narayana Kurup]

support and honour to the Dewan than to the Maharaja himself. Of course, the Maharaja did not say anything then, but he immediately, without the knowledge of his mother, sent for the Dewan and stripped him of the insignia of office. That night, the Maharaja and his mother took a stroll in the Palace kitchen and there they found a gentleman sleeping very soundly on a wooden plank. When the Maharaja asked his mother to identify the sleeping man, to her utter surprise, she found that it was the ex-Dewan. Then the Maharaja told his mother that it was not the power of Dewan Ramayya but the power that he was invested with as Dewan. Though this might be a story, it confirms one truth about the power and prestige of office. So it is very difficult in public life to differentiate between our official capacity and our individual or personal capacity. We know that our Prime Minister asked an officer, who had received large gifts on the occasion of the marriage of his daughter, to return all those presents. There cannot be anything more personal or individualistic than the marriage of one's daughter. That shows that one's individual or private capacity merges itself with his official capacity. Of course, Hon. Ministers do not allow officers to do propaganda for the Congress Party or to collect donations for that purpose. That is well and good. As far as possible, the Ministers also must refrain from collecting donations for the Party publicly and they must avoid being ceremoniously presented with these donations. That is the only point I wished to express, Sir.''

12-26 p.m.

SRI B. K. NALLASWAMI :—" கனம் சாபநாயகர் அவர்களே, இந்த மானியத்தை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். முதலிலே நமது மந்திரிகளில் பலர் இந்த ராஜ்யத்திற்காக எல்லா வகையிலும் தியாகம் செய்துகொண்டு வருகிறார்கள் என்று சொல்லவேண்டும். ஒவ்வொருவரும் இங்கே வராது இருந்தால் ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் சம்பாதிக்க முடியும். அப்படி வெளியில் இருந்தால் எவ்வளவோ ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் சம்பாதிக்கக்கூடியவர்கள் இந்த ராஜ்ய மந்திரிகளாகப் பதவியை ஏற்றுக்கொண்டு பல்வகையாலும் தியாகம் செய்து வருகிறார்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற சம்பளத்தை அவர்கள் செய்துவருகிற சேவையோடு ஒப்பிட்டுப்பார்த்தால் ரொம்பவும் குறைவானது என்பது நமக்கே தெரியும்.

" ஒரு காலத்தில் மகாத்மாஜி ஒவ்வொரு மந்திரிக்கும் சம்பளம் 500 ரூபாய்க்கு மேல் இருக்கக் கூடாதென்று சொன்னார். முன்பு இருந்த காலம் வேறு. இப்போது இருக்கும் காலம் வேறு. இன்றைக்கு ஒரு ரூபாய்க்கு நான்கணாதான் மதிப்புள்ள வகையில் பொருளாதார நிலைமை மாறியிருக்கிறது. ஆகவே இன்றைக்குள்ள நிலைமைப்படி பார்த்தால் மந்திரிகளுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளம் மிகவும் குறைவாகும். ஆனால் நமது மந்திரிகள் ரொம்பவும் நல்ல முறையில் பொதுமக்களுடைய பாராட்டுதல்களுக்கு உரியவர்களாகப் பணி ஆற்றி வருவது மிகவும் பெருமைப்படக்கூடிய விஷயம். இப்படிப்பட்ட திறமைசாலிகளாக மந்திரிகள் இருக்கும்போதே அவர்களின்கீழ் பயிற்சி பெறுவதற்கு ஒரு சில பார்லிமெண்டரி செக்ரட்ரிகளையோ, அல்லது டெபுடி மந்திரிகளையோ எற்படுத்துவது நன்றாக இருக்குமென்று நினைக்கிறேன். மத்திய அரசாங்கத்திலும் கூட நிறைய டிபுடி மந்திரிகளும், பார்லிமெண்டரி காரியதரிசிகளும் பயிற்சி பெற்று வருகிறார்கள். அதைப்போலவே இந்த ராஜ்யத்திலும் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். நான் இதை என் தைரியமாகச் சொல்லுகிறேன் என்றால், அப்படியே பார்லிமெண்டரி காரிய தரிசிகளையோ, டிபுடி மந்திரிகளையோ நமது அரசாங்கம் நியமித்தால் அந்த லிஸ்டில் நான் வரமாட்டேன்."

SRI K. VINAYAKAM :—' அடி சக்கை."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Sir, I would like to know whether the word ' அடிசக்கை ' is a parliamentary word. The hon. Member Sri K. Vinayakam used that word."

MR. SPEAKER :—" May I know the meaning of that word? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Sir, it is a slang word."

SRI M. PALANIYANDI :—" Sir, it means ' Well done '."

SRI K. VINAYAKAM :—" May I translate the word, Sir. It means in English ' well done '."

MR. SPEAKER :—" If it is means ' well done ', then it is parliamentary." (Laughter.)

SRI B. K. NALLASWAMI :—"நமது ராஜ்யத்தின் நன்மையை உத்தேசித்துத்தான் இம்மாதிரியாகப் பார்லிமெண்டரி காரியதரிசிகள், அல்லது டெபுடி மந்திரிகள் என்பதாக இளைஞர்களைப் போட்டு பயிற்சி அளிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். ஏதோ சம்பளம் வரும், அல்லது பதவி கிடைக்கும் என்பதற்காக இவ்வாறு செய்யுங்கள் என்று நான் யோசனை சொல்லவில்லை. திறமை மிக்க மந்திரிகள் இருக்கும் போது ராஜ்ய நிர்வாகத்தை எப்படி நடத்துவது என்கின்ற பயிற்சி இளைஞர்களுக்கும் அளிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே நான் இதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ராஜ்ய நலனை உத்தேசித்தே இப்படிச் செய்ய கனம் முதன் மந்திரி அவர்களும் இதைப்பற்றி யோசிப்பார்கள் என்று நினைக்கிறேன். ஏனென்றால் சில மந்திரிகள் மிகவும் அதிகமாக வேலை செய்கிறார்கள் என்றும்கூட நான் கருதுகிறேன். சிலபேர்கள் சாவகாசமாக இருக்கக்கூடிய நிலைமையும் இருக்கிறது. ஆகவே அதிகமாக வேலை இருக்கக்கூடிய இலாக்காக்களில் வேலை செய்யும் அமைச்சர்களுக்கு உதவி யாகவாவது டெபுடி மந்திரிகளையோ பார்லிமெண்டரி காரியதரிசிகளையோ நியமிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

12-30 p.m "தமிழ் ராஜ்யம் அமைக்கப்படவேண்டும் என்பதைப்பற்றி எதிர்க்கட்சியினர் ஒரு வெட்டுப் பிரேரணை கொண்டுவந்திருக்கிறார். நம்முடைய மந்திரி சபை காரியங்களைச் செய்துகொண்டுபோகிற முறையில் மலையாள, கன்னட மக்கள் தமிழ்நாட்டிலிருந்து பிரிந்துபோய் தங்கள் தங்கள் மொழியினரோடு சேர்ந்துகொள்ள நினைப்பார்கள் என்றுகூட நான் நினைக்கவில்லை. ஏனென்றால், ஒவ்வொரு பிரச்னையிலும் மலையாள தென்கன்னடப் பிரதேசங்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு இந்த சர்க்கார் நியாயம் வழங்கி வருகிறது, என்பதைத்தான் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புகிறேன்.

"சென்னை ராஜ்ய சர்க்கார் மொழிவாரியாகப் பரிசு வழங்கிவருகிறார்கள். தமிழ், மலையாளம், கன்னடம் ஆகிய பாஷைகளில் வெளிவரும் சிறந்த புத்தகங்களுக்கு பரிசு வழங்கிவருகிறார்கள். மலையாளிகளுக்கென்று திருவாங்கூர்-கொச்சி ராஜ்யம் இருக்க, கன்னடியர்களுக்கு மைசூர் ராஜ்யம் இருக்க, மலையாள கன்னட பாஷைகளின் அபிவிருத்திக்கு திருவாங்கூர்-கொச்சி ராஜ்யமும், மைசூர் ராஜ்யமும் இருக்கும்போது நாம் ஏன் அந்த மொழிகளில் வெளிவரும் சிறந்த புத்தகங்களுக்கும் பரிசு கொடுக்க வேண்டும்? பெரும்பாலான கன்னடியர்களும் மலையாளிகளும் இருக்கக்கூடிய ராஜ்யங்களிலே அந்தந்த மொழிகளுக்கு ஊக்கமளிக்கமாட்டார்களா என்று என்னுடைய குறுகிய புத்தியில் தோன்றியிருந்தது. மந்திரி

21st March 1955] [Sri B. K. Nallaswami]

சபையார் அந்த மாதிரியான கருத்தைக்கூட கையாளாமல் தாராள மனப் பான்மையோடு மொழிப் பிரச்னையிலே ரொம்ப கவனம் செலுத்திவருவதை நான் பாராட்டுவதைவிட அந்தந்த மொழிப் பிரதேசத்திலிருந்து வந்திருப் பவர்கள் பாராட்டினால் நன்றாக இருக்குமென்று கருதி நான் இவ் விஷயத்தை இத்துடன் நிறுத்திக்கொள்ளுகிறேன்.

"மலையாள, கன்னட மொழிப் பிரதேசங்கள் சென்னை ராஜ்யத்தி லிருந்து போனால் தமிழர்கள் பலவகைகளிலும் அதிக நன்மை அடை வார்களேயொழிய நன்மைகள் குறைந்துவிடாது. கனம் அங்கத்தினர் ஸ்ரீ டி. ஸி. நாராயணன் நம்பியார் எந்தக் கருத்தைப் பிரதிபலிக்கிறார் என்பது எனக்குத் தெரியாது. சில மாதங்களுக்கு முன்னால் மலையாளி களைக் கொண்ட ஒரு மகாநாடு நடந்தது. அப்பொழுது அவர்கள், மலை யாள ஜில்லாவானது தமிழ்நாட்டுடன் சேர்ந்திருக்கவேண்டுமென்று தீர் மானம் நிறைவேற்றியது எனக்கு ஞாபகத்தில் இருக்கிறது. இந்த விஷ யத்தில் யார் விவேகம் படைத்தவர்கள் என்பதை மலையாள மக்கள்தான் தீர்ப்புக் கூறவேண்டும். இப்பொழுது நம்முடைய ராஜ்யத்தைப் பிரிப் பதிலே அதிக கவனம் செலுத்தவேண்டிய அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன். காரணம் என்னவென்றால் சில தொழிற் கல்லூரிகளில் ஜில்லாவாரியாகப் பிரதிநிதித்துவம் அளித்து மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். அதே மாதிரி உத்தியோகங்கள் வழங்கும் விஷ யத்திலும் ஒரு வரையறை செய்துவிட்டோமானால் தமிழர்களுடைய குறை நீங்கிவிடுமென்று நான் கருதுகிறேன். ஏதோ சில ஜில்லாக்களுக்கு அதிக மாக சலுகைகள் வழங்கப்படுவதாகவும் சில ஜில்லாக்கள் புறக்கணிக்கப் படுவதாகவும் ஒரு எண்ணம் தமிழ்நாட்டில் பரவியிருப்பதால் உத்தியோகம் வழங்குவதிலும்கூட ஜில்லாவாரியாக பிரதிநிதித்துவம் அளிக்கும்படியான ஏற்பாட்டைச் செய்தால் இந்தக் குறையும் நீங்கிவிடும், மொழிவழி மாகாண பிரச்னையும் வற்புறுத்தப்படாமல் போய்விடும்.

"எங்களுடைய ஜில்லா நிர்வாக விஷயமாக சில வார்த்தைகள் குறிப் பிட விரும்புகிறேன். பல தாலூகாக்களில் டெபுடி தாசில்தார்கள் தாலூகா அதிகாரிகளாக இருந்துகொண்டிருக்கிறார்கள். இதனால் பல சங்கடங்களை அனுபவித்துக்கொண்டு வருகிறோம். தகுதி வாய்ந்த நபர்கள் கிடைப்ப தில்லை. குறைந்த சம்பளத்தில் இருக்கும் அதிகாரிகள் லஞ்சம் வாங்கு வதற்குச் சந்தர்ப்பம் ஏற்படுகிறது. தாலூகா அதிகாரிகளாக இருப்பவர்கள் குறைந்த சம்பளம் பெறுபவர்களாக இருப்பதால் அவர்கள் ஓரளவு லஞ்சம் வாங்குபவர்களாக ஏற்பட்டு, அதனால் மக்களுக்கு கஷ்டம் உண்டாகிறது. டெபுடி தாசில்தார் கிரேடில் தாலூகா அதிகாரிகளாக இருப்பவர்களை மாற்றி, தாசில்தார் கிரேடிலுள்ள அதிகாரிகளைப் போடவேண்டியது அவ சியம். எங்கெங்கெல்லாம் டெபுடி தாசில்தார்கள் தாலூகாக்களின் தலை மை இடத்தில் இருக்கிறார்களோ அங்கெல்லாம் அவசியமாக தாசில்தார் கிரேடிலுள்ள அதிகாரிகளைப் போடவேண்டுமென்று நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்."

Sri S. RAMALINGAM :—"கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்கள் கொண்டுவந்திருக்கும் வெட்டுப் பிரேரணையை நான் ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். எனக்கு முன்பாகப் பேசிய ஸ்ரீ பி. கே. நல்லசாமி அவர்கள், 'தமிழ் ராஜ்யம் என்று தனியாக ஏற்படுத்தத் தேவையில்லை, நம்முடைய சர்க்கார் கன்னடியர்களுக்கும் மலையாளிகளுக்கும் எந்தவித மான குறைபாடும் இல்லாமல் நடந்துகொண்டிருக்கிறார்கள்' என்று சொன்னார் . . ."

Sri B. K. NALLASWAMI :—"On a point of information, Sir, மொழிவழி ராஜ்யங்கள் இப்பொழுது அவசியமில்லை என்று நான் சொன்னேனே தவிர, மொழிவழி ராஜ்யங்கள் அமைக்கப்படவே கூடாது என்று நான் சொல்லவில்லை. மொழிவழியாக ராஜ்யங்கள் அமைக் கப்படவேண்டுமென்று காங்கிரஸ் பல வருஷங்களாக வற்புறுத்தி வந்திருக் கிறது. மோதிலால் கமிட்டியும் மொழிவழி ராஜ்யப் பிரிவினையை வற்

புறுத்தியிருக்கிறது. ஆகவே, மொழிவழியாக ராஜ்யங்கள் அமைக்கப்பட வேண்டுமென்பது கம்யூனிஸ்டுகளுக்குப் புதிதாக இருக்கலாம்; ஆனால், காங்கிரஸ்காரர்களைப் பொறுத்தவரையில் அது ரொம்பப் பழைய விஷயமாகும்."

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" On a point of order, Sir. As the hon. Member has mentioned by name, I wish to make this submission. I wish to state clearly that I stand for the formation of States on language basis. The Malayalam Pradesh Congress Committee passed a resolution at their meeting at Palghat opposing the demand for the formation of an Aikya Kerala State and demanding the formation of a Southern State. This, I wish to point out, is in contravention of the principle that the hon. Member himself holds as having been approved by the All-India Congress."

SRI S. RAMALINGAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, நண்பர் ஸ்ரீ நல்லசாமி அவர்கள் என்ன சொல்ல ஆரம்பித்தாரோ அதைத் தான் நானும் சொல்ல ஆரம்பித்தேன். ஏனென்றால், நீண்ட நாட்களுக்கு முன்பாகவே காங்கிரஸ் மகாசபையில் பாஷாவாரியாக மாகாணங்களைப் பிரித்து அமைக்க வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்கள். ஆனால் காங்கிரஸ்காரர்கள் அதிகாரத்திற்கு வந்த பிறகு அவர்கள் வகுத்த கொள்கையை அவர்களே அமுல் நடத்த மறுக்கிறார்கள். அதற்குக் கூறப்படும் காரணம் என்னவென்றால், 'இன்றைக்கு உடனடியாக பாஷாவாரி மாகாணம் தேவையில்லை; அகில இந்திய ரீதியில் ஒற்றுமை அவசியம்; பொருளாதாரத் துறையிலும் நிர்வாகத் துறையிலும் சிக்கல் ஏற்பட கூடாது' என்ற ஒரே காரணத்தைச் சொல்லிக்கொண்டு பாஷாவாரி மாகாண அமைப்பைத் தட்டிக் கழித்து வருகிறார்கள். அதையும் இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

" இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையில் பாஷாவாரி மாகாணம் அமைக்கப்படவேண்டுமென்ற எண்ணம் காங்கிரஸ் கட்சிக்கு மட்டும் இருக்கிறதென்று சொல்ல முடியாது. சாதாரண ஏழை ஜனங்கள், அதிகப் படிப்பறிவற்ற ஜனங்கள் எல்லோரும் தங்களுக்கென்று பாஷாவாரி மாகாணங்கள் அமைக்கப்படவேண்டுமென்று பெருமையுடனும் ஆர்வத்துடனும் எதிர் நோக்கிக்கொண்டிருக்கிறார்கள் என்று இந்த சந்தர்ப்பத்தில் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

" ஒரு சில நாட்களுக்கு முன்பாக நிதி மந்திரி அவர்கள் ஒரு இடத்தில் பேசும்போது, சர்வகலாசாலைகளில்கூட தமிழே போதனா மொழியாக கொண்டுவரப்பட வேண்டுமென்ற அபிப்பிராயத்தை வலியுறுத்தினார்கள். சட்டசபையில் பேசும்போது கூட கல்லூரி நிர்வாகஸ்தர்கள் இதைப்பற்றி ஒரு முடிவுக்கு கூடிய சீக்கிரத்தில் வரவேண்டுமென்று கூறினார்கள். அதற்கு அடிப்படையாக அவர்கள், சொல்லக்கூடிய காரணம் என்னவென்றால், 'பள்ளி மாணவர்கள் தாய் மொழியில் படிப்பதற்கு வசதி இருப்பதினால், கல்லூரிகளிலும் தாய்மொழியிலேயே பாடங்களைப் பயிலுவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் மாணவர்கள் உயர்ந்த கல்வியறிவைப் பெறுவதற்கும், தகுதியுடையவர்களாக வருவதற்கும் சாத்தியமாகும்' என்ற காரணத்தைச் சொல்லி சர்வகலாசாலைகளிலும் தமிழிலேயே அல்லது இதர பிரதேச மொழியிலேயே கல்வியளிக்கவேண்டுமென்று வலியுறுத்தினார்கள். அதே காரணத்தைத்தான் நானும் இங்கு வலியுறுத்தவேண்டிய நிலைமையில் இருக்கிறேன். கிராமப் புறங்களில் இருக்கக்கூடிய விவசாயிகளும், தொழிலாளிகளும் அரசாங்கத்தின் கொள்கைகளைப் புரிந்துகொள்ளவேண்டுமானாலும் சரி, அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் பங்கு கொள்ள வேண்டுமானாலும் சரி, தாங்களும் அரசாங்கத்தில் பங்கெடுத்துக்கொள்ளுகிறோம் என்ற நம்பிக்கை ஏற்படவேண்டுமானாலுங்கூட உடனடியாக பாஷாவாரி மாகாணத்தை அமைக்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. சர்க்கார் இந்த விஷயத்தைத் தட்டிக் கழித்துக்

21st March 1955] [Sri S. Ramalingam]

கொண்டு போகக்கூடாது. மத்திய சர்க்கார் ஏற்படுத்தியுள்ள கமிட்டி பாஷாவாரியாக மாகாணங்களைப் பிரிப்பது சம்பந்தமாக சிபாரிசு செய்யப் போகிறார்கள் என்று சொல்வதில் பிரயோஜனம் இல்லை. நடைமுறையில் செய்து காண்பிக்க வழிகாட்டியாக இருக்கக்கூடிய முறையில் இன்றைக்கு சர்க்கார் ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும். ஜில்லா தலைமைக் காரியாலயங்களின் நடவடிக்கைகளெல்லாம் பிரதேச பாஷையிலேயே நடத்த வேண்டும். ஜனங்களுக்குப் பதில் அளிக்கக்கூடிய காலத்திலும், தமிழிலேயே பதில்கள் அனுப்பப்பட வேண்டும் என்று சர்க்கார் உத்தரவு பிறப்பிக்கவேண்டும். ஜில்லாக்களுக்கும் செக்ரடேரியட்டுக்கும் இருக்கக்கூடிய கடிதப் போக்குவரத்துக்களும் பிரதேச மொழியிலேயே இருக்கவேண்டும். அந்த முறையில் சர்க்கார் உத்தரவு பிறப்பித்தால் மத்திய சர்க்கார் இறுதியில் முடிவு எடுக்கும்போது உதவிகரமாக இருக்கும். முன்கூட்டியே சில ஏற்பாடுகளைச் செய்தால்தான் பின்னால் பாஷாவாரி மாகாணங்கள் ஏற்படும்போது சௌகரியமாக இருக்க முடியும். பாஷாவாரி மாகாணங்கள் ஏற்பட்டால்தான் சாதாரண மக்கள் சர்க்காரின் கொள்கையைப் புரிந்து கொள்வதற்கும், மக்களுடைய குறைகளை சர்க்காருக்குத் தெரிவித்துக் கொள்வதற்கும், சர்க்காரை நடத்துவதில் உண்மையிலேயே மக்களுக்குப் பங்கு இருக்கிறது என்பதை மக்கள் உணர்ந்துகொள்ளுவதற்கும் அனுசரணையாக இருக்கும். ஆகவே, உடனடியாகப் பிரதேச மொழியில் ஜில்லாவிலும், மற்ற இடங்களிலும் காரியங்கள் நடைபெறவேண்டிய ஏற்பாட்டை உடனடியாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"இன்னும் சில விஷயங்களைப்பற்றி இந்த சந்தர்ப்பத்திலே குறிப்பிட விரும்புகிறேன். மந்திரிகள் சட்டசபைக்குள்ளே ஒரு விஷயத்தைப்பற்றி பேசுகிறார்கள். ஆனால் சட்டசபைக்கு வெளியே வேறு விதமாக அதே விஷயத்தைப் பேசுகிறார்கள். அவ்விதமே காரியங்களையும் செய்கிறார்கள்.

"உதாரணமாக கனம் தொழில் மந்திரி அவர்கள் கைத்தறி நெசவாளர்களுக்கு நிவாரணம் அளிக்கும் விஷயமாகப் பேசும்போது மில் துணியின்மேல் $1\frac{1}{2}$ அணா வரி போட்டு கைத்தறி செஸ் பண்டுக்கு கொடுக்கிறோம். அதன் மூலமாக கைத்தறியாளர்களுக்கு சகாயம் செய்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் அதை இரண்டணாவாக உயர்த்தவேண்டும் கேள்வி கேட்டபோது கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள் அவ்வாறு செய்வதற்கில்லை என்றார்கள். ஆனால் இன்றைக்கு வேறுவிதமாகப் பேசி வருகிறார்கள். 12-42 p.m.

"அதேபோல் கனம் மந்திரி மாணிக்கவேலு நாயகர் சட்டசபையில் பேசும்போது காலவரையறைக் குறிப்பிடுவதற்கில்லை என்று சொல்கிறார். ஆனால் அதே சமயத்தில் கனம் காமராஜ நாடார் ஆகஸ்ட் மாதத்திற்குள் நிலச் சீர்திருத்தம் கொண்டுவரப்படும் என்று கூறுகிறார்கள். அதுமாதிரியாக சபைக்கு உள்ளேயும் வெளியேயும் மந்திரிகள் பேசுவதில் மிகுந்த வித்தியாசம் இருக்கிறது. இங்கு ஒன்று பேசுகிறார்கள். சபைக்கு வெளியே ஒன்று பேசுகிறார்கள்.

"இது மாதிரியாகவே இன்னும் பல விஷயங்களிலும் சங்கடமான நிலைமையை ஏற்படுத்திவிடுகிறார்கள். சர்க்காரிடம் வரும் உத்திரவுக்கும் மந்திரிகள் நடந்துக்கொள்வதற்கும் நேர்மாறாக இருக்கிறது. அதனால் சபையின் கௌரவம்தான் குறைகிறது.

"மேலும் சர்க்கார் இலாக்காவிற்கும் மந்திரிகள் காரியாலயத்திற்கும் தொடர்பு இல்லை என்றுதான் சந்தேகிக்கவேண்டியதாக இருக்கிறது. குறிப்பிட்ட விஷயங்களில் சர்க்காருடைய பதில் ஒருவிமாக இருக்கிறது. ஆனால் மந்திரியாருடைய கடிதத்தில் ஒரே விஷயத்தைப்பற்றி வேறு விதமான பதில் கிடைக்கிறது. இவ்விதமாக மந்திரிகள் இலாக்காவிற்கும் மந்திரிகளுக்கும் சம்பந்தமில்லாமல் இருக்கிறது.

"கனம் தொழில் மந்திரி அவர்கள் சில கேஸ்களை லேபர் கமிஷனர் அட்ஜூடிகேஷனுக்கு விடும்படி சிபார்சி செய்யவில்லை. அதனால் நாங்கள் விடப்போவதில்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால் அதற்கு மாறாக காரியங்கள் நடைபெறுகின்றன.

[Sri S. Ramalingam] [21st March 1955

"சட்ட சபையில் ரூல்ஸ் சம்பந்தமாக விவாதம் வந்தபோது சட்டசபையில் அதிகமாகக் கேள்விகள் கேட்கக்கூடாது. அதனால் சர்க்காருக்கு அதிகமான பணம் செலவாகிறது. வேலையும் அதிகமாகிறது. ஆதலால் அங்கத்தினர்கள் கேள்விகள் கேட்பதற்குப் பதிலாக இந்தந்த இலாக்காவிற்கு எழுதினால் அவர்கள் பதில் அனுப்பிவிடுவார்கள் என்று சொன்னார்கள். ஆனால் சர்க்கார் இலாக்காவிற்கு கடிதம் எழுதினால் எந்தவிதமான பதிலும் கிடைப்பதில்லை. ஆறு மாதத்திற்குப் பிறகு அக்னாலட்ஜ்மெண்டு கூட கிடைப்பதில்லை. கடிதத்தை ரிஜிஸ்தர் செய்தனுப்பினால் யாரோ கிளார்க் கையொப்பமிட்டு அனுப்பிவிடுகிறார். இது மாதிரியாக சர்க்கார் காரியாலயங்களில் சாதாரண விஷயங்கள்கூட கவனிக்கப்படாமல் இருக்கின்றன.

"கடைசியாக தஞ்சாவூர் நகரத்தில் ஒரு புதிய காலேஜ் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதைப்பற்றி சட்டசபையில் பல கேள்விகள் கேட்கப்பட்டன. இந்த காலேஜ் கட்டுவதற்கு ஜில்லா போர்டிடமிருந்து 5 லட்ச ரூபாய் செகுரிடியாக வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்லுகிறார்கள். இம்மாகாணம் பூராவிற்கும் நெற்களஞ்சியமாக இருக்கும் தஞ்சாவூர் சர்க்காருக்கு அதிகப்படியான வரியைக் கொடுக்கிறது. தஞ்சாவூரில் அதிகமான காலேஜ்கள் கிடையாது. கும்பகோணத்தில் ஒரே காலேஜ் இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் தஞ்சை நகரில் ஒரு புதிய காலேஜ் ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்."

12-45 p.m. SRI A. SAMBASIVAM :—"மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இப்பொழுது கொண்டுவந்திருக்கும் மானியத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேசவிரும்புகிறேன். இப்பொழுதுள்ள நமது நிதி அமைச்சர் அவர்கள் கல்வித் துறையில் பொதுவாக காட்டிவரும் அக்கறை மக்கள் எல்லோருடைய மனதை மிகுதியாகக் கவர்ந்திருக்கிறது. மொழி வளர்ச்சியிலே அவர் மிகுந்த ஊக்கம் காட்டி வருகிறார் என்பது நிர்வாக முறையிலே சில சீர்திருத்தங்கள் செய்திருப்பதனாலேயே நன்கு அறியலாம். நமது குடிமக்களுக்கு நமது அரசாங்கம் நடக்கிறது என்ற நம்பிக்கை பிறக்கவேண்டுமானால் ஜில்லா நிர்வாகங்கள் உடனடியாக அந்தந்த பிரதேச மொழி தாய்மொழியிலேயே அரசாங்கம் நடத்த முன் வரவேண்டும். அதிகாரிகள் பிரதேச மொழியைக் கற்றவராகவும், ஜில்லா கலெக்டர் போன்றவர்களையே அமர்த்தவேண்டும்.

"திருச்சி ஜில்லாவில் தமிழில் அரசாங்கம் நடத்தும் பரிஷார்த்த ஏற்பாட்டில் வெற்றிகரமாக நடக்காதது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அங்குள்ள பெரிய அதிகாரி வெற்றிகரமாக நடத்தவேண்டுமென்ற ஊக்கம் இல்லாதவராகவும் ஏதோ கடமையைக் செய்யவேண்டுமே என்ற எண்ணம் கொண்டவராக இருக்கிறாரே தவிர மக்களுக்கு நன்மை பயக்கும் அளவுக்கு கிரமம் எடுத்துக்கொண்டாகத் தெரியவில்லை. ஒரு வேளை ஆங்கிலத்தில் அதிக பற்றுகொண்டவராக இருக்கலாம். இருந்தாலும் கனம் நிதி அமைச்சர் அளிக்கும் ஊக்கத்தில் ஒருவிதமான நம்பிக்கை ஏற்படுகிறது. தாய் மொழியிலே நிர்வாகம் நடந்தால்தான் குடிமக்களுக்கு அரசாங்கத்திடம் நம்பிக்கை ஏற்படும். அந்த அளவுக்கு மக்கள் அதிகாரிகளிடம் பழகும்படியான பழக்கம் இனி ஏற்படுத்தவேண்டும். ஒரு சில பெரிய அதிகாரிகள் மாத்திரம் பொதுமக்களிடம் தொடர்பு கொண்டால் போதாது. பழையபடி பெரும்பாலான அதிகாரிகள் குடிமக்களிடம் கடுமையாகவும் அலட்சிய மனப்பான்மையுடனும் நடந்துவருகிறார்கள் என்ற குறைகள் இன்னும் இருந்து வருகின்றன.

"குறிப்பாக இப்போதுள்ள நிர்வாகத்தை ஓர் அளவு கவனித்தால் பெரிய அதிகாரிகள் முதற்கொண்டு சாதாரண அதிகாரி வரையில் குடிமக்களுக்கு மதிப்புக் கொடுக்காமல் இருக்கிறார்கள். அந்த முறையிலே பார்க்கப்போனால் விற்பனை வரி அதிகாரிகள் பெரிய வியாபாரிகளிடம்கூட மரியாதையில்லாமல் கடுமையாகவும் மிகுந்த அவசரத்தோடும் நடந்து கொள்ளும் முறையானது அரசாங்கத்தின் மேல் குடிமக்களுக்கு பெரிய வெறுப்பை உண்டு பண்ணக்கூடியதாய் இருக்கிறது.

21st March 1955] [Sri A. Sambasivam]

"அரசாங்க அதிகாரிகள் மக்களிடத்தில் நடைமுறையில் சரிவர நடந்து கொள்வதில்லை. இப்போது மக்களுடைய அரசாங்கம் நடக்கின்றது; அவர்களுடைய ஓட்டினாலேயே அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களாலே அரசாங்கம் நடக்கின்றது. அதனால் நாம் அவர்களிடத்தில் கடுமையாக நடந்துக்கொள்ளக்கூடாது என்று கடமையுணர்ச்சியை அதிகாரிகளுக்கு உண்டாகும்படி செய்யவேண்டும். அதற்கு வேண்டிய தீவிரமான நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக எடுத்துக்கொள்ளவேண்டும். 12-50 p.m.

"இன்னும் இந்த அரசாங்கம் பழைய முறையிலேயே நடந்துகொண்டிருக்கிறது. ஒரு விண்ணப்பம் செய்துகொண்டால், அது உடனடியாகப் பார்த்து 10, 15 நாட்களுக்குள் அல்லது ஒரு மாதத்திற்குள் அதற்கு பதில் அனுப்பக்கூடிய நிலைமையிலே இந்த நிர்வாகம் இன்னும் ஏற்படவில்லை. தாலூகா ஆபீஸ் முதல், சென்னை அரசாங்கத் தலைமைக் காரியாலயமான செகரடேரியட் வரையிலும் ஏதாவது ஒரு அவசரமான விண்ணப்பம் செய்துகொண்டாலும், அது அவசரத்திற்குப் பயன்படாமல் அந்தக் காரியங்களெல்லாம் முடிந்தபிறகும்கூட அதற்கு பதில் போய்ச் சேராத நிலைமையில்தான் இருக்கிறது. ஆகையால் இதை எப்படியெல்லாம் சீக்கிரமாகப் பார்த்து பரிசீலனை செய்து, விண்ணப்பத்திற்கு உடனடியாக பதில் அனுப்புவது என்பதில் அரசாங்கம் மிகுதியான கவனம் காட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"நீதி கொடுக்கின்ற முறையிலும் குடிமக்களுக்கு எவ்விதச் சலுகைகளும் செய்யப்படவில்லை. அவர்கள் ஏதாவது சிறு விஷயம் தெரிந்துகொள்ளவேண்டுமென்றாலும், அவர்களை கலெக்டர் ஆபீசுக்கோ அல்லது தாலூகா ஆபீசுக்கோ சென்று தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. எப்படியும் தாசில்தார் ஒவ்வொரு மாதத்திலும் சில நாட்கள் இந்தக் கிராமங்களுக்கெல்லாம் சென்று சுற்றுப்பிரயாணம் செய்து வருகின்றார். அப்படிப் போகின்றவர் சாப்பிட்டுவிட்டு அங்கு புறப்பட்டுச்சென்று, போகின்ற இடத்திலே இளநீர் வெட்டிக்கொடுத்தால் அதைக் குடித்துவிட்டு, கணக்குப்பிள்ளை காட்டும் புத்தகத்திலே கையெழுத்திட்டுவிட்டு உடனே புறப்பட்டு வந்துவிடுகிறார். அப்படியில்லாமல் போகின்றவர்கள் அங்கு தங்கி அவர்களுடைய குறைகளைக் கேட்டு, அங்கேயே பரிசீலனை செய்துவிட்டு வரவேண்டும். சாதாரணமாக ஒரு குடியானவன் தானே உழுது பயிரிடுபவனாக இருந்தால், அவன் அவனுடைய மாடுகளையும், இன்னும் மற்றக் காரியங்களையெல்லாம் விட்டுவிட்டு தாலூக்கா ஆபீசுக்கு அல்லது கோர்டுக்கு வருவதென்றால் மிகவும் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. அவனுடைய தொழிலும் அதனால் பாதிக்கப்படுகின்றது. அந்த வகைகளையெல்லாம் பார்க்கின்றபோது, அரசாங்கமானது இப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் இன்னும் விரிவாகச் சலுகைகள் கொடுத்துதவ நல்ல முறையில் இயங்க வேண்டியிருக்கிறது. கிராமங்களுக்குச் செல்லும் இப்படிப்பட்ட அதிகாரிகள் உடனடியாக திரும்பி வந்துவிடாமல், அங்கு இரண்டு மூன்று தினங்கள் தங்கி, ஒவ்வொரு குடிமக்களுக்கும் உள்ள குறையை விசாரித்து, அவ்வப்போது இல்லாவிட்டாலும் ஒரு 10 தினங்களுக்குள்ளாவது நிவர்த்தி செய்யக்கூடிய ஒரு நிலைமையை ஏற்படுத்தவேண்டும். அப்பொழுதே நாம் அவர்களுக்கு உண்மையான வசதிகளைச் செய்துகொடுத்தவர்களாவோம்.

"இப்படிப் பொதுவாகப் பார்க்கின்றபோது நமது அரசாங்கமானது இவ்விதமான குறைகளை யெல்லாம் குடிமக்களுக்குப் போக்கவேண்டுமானால், பலவிதமான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. பொதுவாக என்னுடைய தொகுதியாகிய சேலம் ஜில்லாவைப் பொறுத்தவரையில் நிறைய குறைகள் இருக்கின்றன. அதிலுள்ள குறைகளைச் சொல்லவேண்டுமானால், சொல்லிக்கொண்டே போகலாம். சில குறைகளை மட்டும் குறிப்பிட விரும்புகின்றேன். நல்ல பாசன வசதி கிடையாது; மின்சார விஸ்தரிப்பு கிடையாது; நல்ல தொழிற் கல்லூரிகளோ அல்லது கலைக் கல்லூரிகளுக்கோ வசதி கிடையாது. எங்கள் ஜில்லாவில் 33 லட்சம் மக்கள் வசிக்கிறார்கள். பெரிய ஜில்லா. அதோடு மட்டுமல்லாமல் மிகவும் பிற்போக்கான ஜில்லா. ஆகையால் இந்த ஜில்லாவிற்கு தனிப்பட்ட அக்கறை காட்டி ஆவன செய்யவேண்டுமென்று மனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

"சேலம் ஜில்லாவைப் பற்றி மற்றொன்று சொல்ல விரும்புகிறேன். இது மலைப்பாங்கான பிரதேசம். மழை பெய்தால் உடனே தண்ணீரெல்லாம் உருண்டு ஓடி தூரத்திலுள்ள ஏரிகளுக்கோ, கடலுக்கோ போய் விழுகிறது. அல்லது வேறு ஜில்லாவிற்குச் சென்று விடுகிறது. எங்கள் ஜில்லாவிற்கு சரியானபடி நீர்நிலைகள் வசதியில்லை. இரண்டொரு ஏரிகள் இருந்தாலும்கூட, அவைகள் மிகப் பழமையானது. 100 ஆண்டுகளுக்கு மேலாகியும் அவைகள் புதுப்பிக்கப்படவில்லை. அங்கிருக்கக்கூடிய நிலங்கள் எல்லாம் பெரும்பாலும் வரண்டிருக்கின்றன. உதாரணமாக, கொல்லஞ்சேரி என்ற ஒரு கிராமத்திலே 10 வருஷங்களுக்கு முன்னால் 7 ஆயிரம் ஜனத்தொகைக்கு மேல் இருந்தார்கள். ஆனால் இன்றைக்கு 1,500 மக்கள், 2,000 மக்களுக்கு அவர்கள் குறைந்து கொண்டு வந்து விட்டார்கள். சாதாரணமாக வளர்ந்து வரக்கூடிய ஒரு கிராமம் அங்கு சரியான தண்ணீர் வசதியில்லாமையால், மழையில்லாமையால், வேலையில்லாமையால் அந்தக் கிராமத்திலிருக்கக்கூடிய மக்கள் வெளியிடங்களுக்குச் சென்று குடியேறவேண்டி ஏற்பட்டுவிட்டது. இன்று கிராமம் பாலைவனமாகத்தான் காட்சியளிக்கக்கூடிய நிலைமையில் இருக்கிறது. ஆகவே அங்கெல்லாம் தண்ணீர் வசதி செய்து கொடுக்க, நல்ல நீர் நிலைகளை ஏற்படுத்த வேண்டியது அவசியம். இந்த வசதிகளையெல்லாம் செய்ய, சேலம் ஜில்லா மீது ஒரு தனிப்பட்ட அக்கறை காட்டும்படியாக அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு, இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கின்றேன்."

12-55 p.m. * SRI M. P. SUBRAMANIYAM :—"கனம் தலைவர் அவர்களே, இந்த மான்யத்தின்மீது கொண்டு வரப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகின்றேன். பொதுவாக இப்போது கட்சி அரசாங்கம் நடைபெற்று வருகின்றபோதிலும் கூட, கட்சியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்கள், அமைச்சராக வந்துவிட்ட பிறகு, எல்லா அரசியல் கட்சிகளுக்கும் பொதுவானவர்கள் என்பதை மனதிலே வைத்துக்கொள்ள வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள். ஏனென்றால், கட்சியிலே சேர்ந்தவர்கள்கூட அமைச்சராகி விட்ட பிறகு, பொது மக்களின் நலன்களை சமமாக எண்ணுமல், தங்களுடைய சுற்றுப் பிரயாணத்தை கட்சிப் பிரசாரத்திலே இறங்குவதற்கு உபயோகப் படுத்துகிறார்கள் என்பதை இந்தச் சமயத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதையே தான் இந்தப் பக்கத்திலிருக்கும் நண்பர் குரூப் அவர்கள் வலியுறுத்திக் கூறினார்கள். 'கட்சி மூலமாக அமைச்சராக வந்துவிட்ட பிறகு, அமைச்சர்கள் கட்சிப் பிரசாரத்திற்காக தங்களுடைய பதவியின் செல்வாக்கைப் பயன் படுத்தக்கூடாது' என்று கூறினார்கள். அதையே தான் நானும் 'அமைச்சர்கள் தங்களுடைய செல்வாக்கை தங்களுடைய கட்சிப் பிரசாரத்திற்காக உபயோகப்படுத்திக் கொள்ளக் கூடாது' என்பதை என்னுடைய வேண்டுகோளாக இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

"அமைச்சர்கள் அடிக்கடி சுற்றுப் பிரயாணம் செய்யும் சமயங்களில் மக்களுடைய குறைகளைக் கவனிப்பதாகச் சொல்லிக் கொண்டு, அங்குள்ள தங்கள் கட்சியைச் சார்ந்த பிரமுகர்களைப் பார்ப்பதற்கும், அங்கு ஏதாவது திறந்து வைப்பதற்கும் தான் செல்லுகின்றார்கள். பொதுவாக அந்தந்த இடங்களிலுள்ள குறைகளை அரசாங்கம் தெரிந்து கொள்ள வேண்டுமானால், அந்தந்தத் தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபைப் பிரதிநிதிகள், இன்னும் மற்றப் பிரதிநிதிகளும் இருக்கிறார்கள். அவர்களைக் கொண்டே தெரிந்து கொள்ளலாம். அதற்காக அடிக்கடி சுற்றுப் பிரயாணம் வர வேண்டிய தேவையில்லை. அப்படி மற்றக் கட்சிப் பிரதிநிதிகள் இருக்கக் கூடிய தொகுதிகளில் தெரிந்து கொள்ள வேண்டுமானாலும், தங்கள் கட்சியைச் சார்ந்த வேறு தொகுதியில் இருக்கக்கூடிய பிரதிநிதிகளைக் கொண்டு தெரிந்து கொள்ளலாம். அப்படியும் இல்லா விட்டால் அங்கிருக்கக்கூடிய அரசாங்க உத்தியோகஸ்தர்களைக் கொண்டு தெரிந்து கொள்ளலாம். அமைச்சர்கள் அனுவசியமாகச் சுற்றுப் பிரயாணங்களில் தங்களுடைய காலத்தையும், திறமையையும் செலவிட வேண்டிய அவசிய

21st March 1955] [Sri M. P. Subramaniyam]

மில்லை. அந்த நேரத்தில் அவர்கள் தங்களுடைய காரியாலய வேலைகளை திறமையாகச் செய்வதற்கு வசதியாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

"இப்போது சாதாரணமாக ஜனங்கள் சிறிய குறைகளையெல்லாம் நேரடியாக மந்திரிகளிடத்தில் அனுப்பி விடுகிறார்கள். அதிலும் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களாக இருக்கிற காரணத்தால் எல்லாவற்றிற்கும் அமைச்சருக்கே எழுதிக் கேட்கிறார்கள். இதையெல்லாம் அவர்கள் கவனித்து பரிசீலனை செய்ய முடியாது என்பதை நான் நன்கு உணருகின்றேன். ஆனால் அப்படி அனுப்பக்கூடியவற்றில் ஏதாவது முக்கியமான விண்ணப்பங்களாக இருந்தாலும், அவைகளை அமைச்சர்கள் கவனியாது, அப்படியே அவைகளை அதிகாரிகளுக்கு அனுப்பி விடுகிறார்கள். அவைகள் யாரிடமிருந்து எதற்காக வந்திருக்கின்றன என்பதைக்கூட சரியாக கவனிப்பதில்லை. எல்லாவற்றையும் நிதானமாகப் பார்ப்பதற்கு அவர்களுக்கு அவகாசம் கிடைப்பது கஷ்டம்தான். ஆனால் அவர்கள் அதே சமயத்தில் இம்மாதிரியான சுற்றுப் பிரயாணங்கள் அடிக்கடிப் போவதை நிறுத்தினால் ஓரளவு திறமையாகவும் சீக்கிரமாகவும் இந்தக் காரியங்களையெல்லாம் செய்வதற்கு முடியுமென்று நம்புகிறேன்.

"மற்றொரு காரணத்தையும் இந்த சந்தர்ப்பத்தில் கூற விரும்புகின்றேன். இப்போது அமைச்சராக இருப்பவர்கள் எண்ணிக்கை அதிகம் என்று ஒரு சிலர் கூறினாலும் கூறலாம். ஆனால் என்னுடைய தனிப்பட்ட அபிப்பிராயம் இப்போது இருக்கும் அமைச்சர்கள் போதவே போதாது; இன்னும் அதிகமாக ஏற்படுத்த வேண்டுமென்பதுதான். ஏனென்றால் இப்போது நம்முடைய நிதி மந்திரி அவர்களை எடுத்துக்கொண்டால் பல மந்திரிகள் செய்யக்கூடிய அலுவல்களை ஒருவர் பார்த்துக் கொள்ளுகிறார். அதனால் அவர் தன்னுடைய நேரத்தையும், திறமையையும் ஒரு குறிப்பிட்ட துறையில் மட்டும் செலவிட முடியாமல், எல்லாவற்றையும் பார்க்க வேண்டியிருக்கிறது. நமது நிதி மந்திரி அவர்கள் கல்வி விஷயங்களைப் பார்த்துக்கொள்ள வேண்டியிருக்கிறது; அதோடு சட்டம், சமாதானத்தைப் பார்த்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. மற்றும் நிதி விஷயங்களையும் கவனிக்க வேண்டியிருக்கிறது. இப்படி மூன்று மந்திரிகள் கவனம் செலுத்தக்கூடிய விஷயங்களை ஒரு மந்திரியே கவனிக்க வேண்டியிருக்கிறது. அப்படியில்லாமல் ஒவ்வொன்றிற்கும் ஒரு மந்திரியை நியமித்தால் காரியங்கள் மிகவும் துரிதமாகவும், நல்ல முறையிலும் கவனிக்கப்பட்டு ஒழுங்காக நடக்க முடியும். இப்படி மந்திரிகளை அதிகப் படுத்துவதால் செலவு அதிகப்படலாம் என்று சொல்லக்கூடும். செலவு அதிகமானாலும், அதனால் அதிகப் பலன்கள் ஏற்பட முடியும். ஒரு வருஷத்திலே 45 கோடி ரூபாய் செலவு செய்யும்போது, இப்படி நன்மை ஏற்படுவதற்காக மேலும் ஒரு சில மந்திரிகளை நியமிப்பதால் ஒன்றும் நேர்ந்துவிடாது. இவ்வாறு அதிக அமைச்சர்களை ஏற்படுத்த வேண்டுமென்ற எனது அபிப்பிராயத்தையும் இச்சமயத்திலே கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

"அதோடு, இந்த அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கோ, அல்லது **1 p.m.** அமைச்சர்களுக்கோ விண்ணப்பங்கள் அனுப்பினால் சரியான காலத்தில் பதில் கிடைப்பதில்லை என்பது இருதரப்பு அங்கத்தினர்களும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். உதாரணமாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். 4, 5 மாதங்களுக்கு முன்பு, **Inspector of Local Boards**-க்கு ஆத்தூர் வட்டாரத்திலிருந்து ஒரு விண்ணப்பம் அனுப்பியிருந்தார்கள். இரண்டு மாத காலம் கடந்த பிற்பாடுகூட பதில் வராததால், இப்படிப்பட்ட விண்ணப்பம் ஒன்று வந்திருக்கிறதா என்று அவர்கள் ஆபீசில் போய் விசாரித்தோம். அங்கேயிருப்பவர்கள் குமாஸ்தாவை கூப்பிட்டு விண்ணப்பம் வந்திருக்கிறதா என்று பார்க்கச் சொன்னார்கள். அப்படிப் பார்த்து விட்டு, முதலில் விண்ணப்பம் வரவில்லை என்று சொன்னார்கள். உடனே முத்திரையிட்ட **acknowledgment form** காட்டிய பிறகு மறுபடியும் வந்திருக்கிறது என்று ஒப்புக்கொண்டார்கள். இதிலிருந்து, அதிகாரிகள் பொறுப்பற்ற முறையில், பதில் கொடுக்க வேண்டுமென்ற

[Sri M. P. Subramaniyam] [21st March 1955

கடமை உணர்ச்சியில்லாமல் இருக்கிறார்கள் என்பது நன்கு தெரிகிறது. இதைப் போலத்தான் தலைமை நிலையங்களிலுள்ள அதிகாரிகளும் அமைச்சர்களும்கூட நடந்து கொள்ளுகிறார்கள். நண்பர் குரூப் அவர்கள் குறிப்பிட்டதுபோல, சட்டசபை மெம்பர்களுக்கு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக, அவர்கள் மனுக்களின் பேரில் இன்னென்ன காரியங்களில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை தெரிவித்தால் ஒழிய, சர்க்கார் பொது மக்களுக்கு ஆற்றவேண்டிய பணியில் தவறியவர்கள் ஆவார்கள் என்று அறிவுறுத்த விரும்புகிறேன்.

"மற்றும் ஒன்று. இந்த சம்பள விஷயத்தைப் பொறுத்த வரையில், மிக மிக குறைந்த சம்பளம் வாங்குபவர்களும் மிக அதிகமாகச் சம்பளம் வாங்குபவர்களும் இருந்து வருகிறார்கள். மிக அதிகமான சம்பளம் வாங்குபவர்களுடைய சம்பளத்தை குறைக்க வேண்டுமென்ற அபிப்பிராயம் பொதுவாக மக்களிடையே இருந்து வருகிறது. சமீபத்தில் ஒரு மாகாணத்தில், பம்பாய் மாகாணம் என்று நினைக்கிறேன். இது சம்பந்தமாக ஒரு சட்டம் கொண்டு வருவதாக பத்திரிக்கையில் பார்த்தேன். அதே மாதிரியான முயற்சியில் நமது அரசாங்கமும் ஈடுபடுவது நல்லது என்று நான் கருதுகிறேன். மந்திரிகளுக்கு ரூபாய் 1,500 சம்பளம் கொடுப்பது மிக அதிகமானது என்று சிலர் கூறுகிறார்கள். நாட்டின் நிலைமையை கவனிக்குமிடத்து, இது அதிகமாக இருக்கலாம். ஆனால் அதே சமயத்தில் ரூபாய் 3,000, 3,500 சம்பளம் வாங்கக்கூடிய செகரிடரிகளை வைத்துக் கொண்டிருப்பது சரியல்ல என்று சொல்ல ஆசைப்படுகிறேன். அண்மையில் ஆவடி காங்கிரஸில் நல்லதொரு திருத்தம் கொண்டு வந்ததாக பத்திரிக்கையில் பார்த்தேன். அதாவது எந்த உத்தியோகஸ்தருக்கும், மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்டிருக்கும் தலைவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளத்தைவிட அதிகமாக சம்பளம் இருக்கக்கூடாது என்ற திருத்தம் வந்ததாக பார்த்தேன். இந்த முறையை நம் மாகாண விஷயத்தில் அனுசரிக்கப்பட்டு, ரூபாய் 3,000, 3,500 என்று கொடுக்கப்படும் சம்பளங்களை படிப்படியாக குறைத்து கீழே இருக்கும் சிப்பந்திகளின் சம்பளத்தை உயர்த்தினால்தான், அது சமதர்ம பாணியில் சமுதாயத்தை அமைக்கும் அறிகுறியாக இருக்குமென்று கூற விரும்புகிறேன்.

"அடுத்தபடியாக மொழிவழி மாகாணங்கள் அமைப்பதுதான் காங்கிரஸினுடையவும், இதர கட்சிகளினுடையவும் பொதுவான கொள்கை என்று சொல்கிறார்கள். ஆனால், இது கொள்கையளவில் நிற்காமல், நடைமுறையில் ஏற்படவேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள். குறிப்பாக மொழிவழி மாகாணம் ஏற்பட்டால், சட்டசபையில் இப்போது ஏற்படும் மொழித்தொல்லை நீங்கும். இப்போது இருக்கும் சட்டசபையில் கன்னட மொழி பேசுபவர்களும், மலையாளமொழி பேசுபவர்களும் இருக்கிறார்கள். ஆனாலும் அடிக்கடி அமைச்சர்கள், தமிழ்மொழி பேசும் அங்கத்தினர்கள் அதிகப்படியான எண்ணிக்கையில் இருப்பதால், அவர்கள் புரிந்துகொள்ளவேண்டியதற்காக, தமிழில் பேசவேண்டியிருக்கிறது. தமிழில் பேசுவது வரவேற்கதக்கதுதான். இருந்தபோதிலும், அதே சந்தர்ப்பத்தில் சிறுபான்மையாக இருக்கக்கூடிய, இதர மொழி பேசும் அங்கத்தினர்களுக்கும் சட்டசபையில் நடக்கும் நடவடிக்கைகளை புரிந்துகொள்ள அவர்களுக்கு உரிமையிருக்கிறது. ஆகவே இந்த தொல்லையைபோக்க மொழிவழி மாகாணம் அமைக்கவில்லை என்றால், வேறுஎன்ன சமாதானம் சொல்லியும் பிரயோஜனப்படாது. அதோடுமட்டுமல்லாமல், எவ்வளவு நல்லமுறையில் அந்த மலையாளம், கன்னடம் போன்ற மொழிகள் பேசும் மக்கள் வாழும் பகுதிக்கு நாம் செலவு செய்தபோதிலும் கூட, தவறுகளோ, சரியாகவோ, அந்த வட்டார மக்களுக்கு, தமிழ்நாட்டில் இருக்கக்கூடியவர்கள் பாரபட்சமாக நடந்துகொள்வதாக, ஒரு எண்ணம் இருந்து வருகிறது. ஆந்திர மாகாணம் பிரிவதற்கு முன்பு, ஆந்திர மக்களும் இதே மாதிரியாகத்தான் சொல்லிக்கொண்டிருந்தார்கள். எவ்வளவு புள்ளி விவரங்களை எடுத்துக்கூறினாலும், அவர்களுக்கு அந்தமாதிரியான எண்ணம் இருக்கத்தான் செய்யும். அந்தந்த பகுதி மக்களுக்கு தங்கள் தங்கள் தாய்மொழி வளர்ச்சி அடையவேண்டுமென்ற உணர்ச்சி ஏற்பட்ட பிறகும்,

21st March 1955] [Sri M. P. Subramaniyam]

மொழிவழி மாகாணங்கள் அமைக்கப்படவேண்டுமென்ற கொள்கையை ஆட்சியாளர் ஒப்புக்கொண்ட பிறகும், நடைமுறையில் அதைச் சீக்கிரம் கொண்டுவர அரசாங்கம் முன்வரவேண்டும்.

"கடைசியாக, ஒன்றே ஒன்று, நண்பர் சாம்பசிவம் அவர்கள் சேலத்தைப்பற்றிகுறிப்பிட்டார்கள். நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புவதெல்லாம், இந்த நீர்பாசனத் திட்டங்களை பொருத்தவரையில் மிகப்பெரிய திட்டங்கள் செய்ய நமது நாட்டில் உள்ள வசதிகளெல்லாம் தீர்ந்துவிட்டது என்று சொல்கிறார்கள். சிறிய நீர்ப்பாசன திட்டங்கள் செய்வதற்கு இன்னும் வசதிகள் ஏராளமாக இருக்கின்றன. இந்தத் திட்டங்களை வகுப்பதில் அரசாங்கமோ, அதிகாரிகளோ கடைபிடிக்கும் நோக்கம் மிகவும் வருந்தத்தக்கதாகயிருக்கிறது. பெரிய பெரிய திட்டங்களை எடுத்துக் கொண்டு பார்த்தோமேயானால், ஏக்கராவிற்கு 2,000 ரூபாய் செலவாகும் திட்டங்களை எடுத்திருக்கிறார்கள். தென் ஆற்காட்டில் ஒரு திட்டம் எடுத்திருக்கிறார்கள். ஒரு ஏக்கராவிற்கு ரூபாய் 2,000 என்று அந்த திட்டம் மதிப்பிடப்படுகிறது. இந்தப்போக்கு மாறவேண்டும். பெரிய நீர்ப்பாசன திட்டங்கள் வகுக்க நமது நாட்டில் உள்ள வசதிகள் தீர்ந்ததென்றால், சிறிய நீர்ப்பாசன திட்டங்கள்செய்ய வசதியிருப்பதால், அதிகமாக செலவானாலும், ஏக்கராவிற்கு ரூபாய் 1,000 செலவானாலும், அத்திட்டங்களை எடுத்துக்கொள்ள சர்க்கார் முன்வரவேண்டும். இப்போதெல்லாம் பொது மக்களுக்கு விழிப்பு உணர்ச்சி ஏற்பட்டிருப்பதால் கிராமத்தில் உள்ள மக்கள்கூட எங்களுக்கு நீர்ப்பாசன வசதி வேண்டுமென்றுகோரி விண்ணப்பங்கள் கலெக்டர்களுக்கு போடுகிறார்கள். சேலத்திலிருந்து கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக, நீர்ப்பாசன மகாநாடுகள் நடத்தி, புதிய நீர்ப்பாசன திட்டங்களை investigate செய்ய தனிப்பட்ட Engineer-கள் போடப்படவேண்டும் என்று கோரி, தீர்மானங்கள் நிறைவேற்றி சர்க்காருக்கு அனுப்பியிருந்தும்கூட, இதுவரையில் அதற்கு பதில் வரவில்லை. ஆகவே, இந்த சந்தர்ப்பத்தில் அரசாங்கம் உடனடியாக இந்த விஷயத்தில் கவனம் செலுத்தி, சேலத்தில்மட்டுமல்ல, மற்ற பகுதிகளுக்கும் சிறு நீர்ப்பாசன திட்டங்களை வகுக்க, இருக்கும் வசதிகளை பரிசீலிப்பதற்கு ஏற்கனவே இருக்கும் Engineer-களை தவிர்த்து, வேறு Engineer-கள் போடப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள்ளுகிறேன்."

* SRI S. VADIVELU :—"மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, தோழர் கல்யாணசுந்தரம் அவர்கள் கொண்டுவந்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன்பு பேசிய பல அங்கத்தினர்கள், தமிழ்மொழி ஆட்சி மொழி ஆக்கபட்டால், நல்லமுறையில் ஒவ்வொரு அங்கத்தினரும் தங்களுடைய உண்மையான கருத்துக்களையும், தொகுதி மக்களின் பிரச்னைகளையும் எடுத்துச்சொல்ல முடியும் என்று குறிப்பிட்டார்கள். இருந்தாலும் கடந்த மூன்று வருஷகாலமாக நமது சபையில் ஆங்கிலம்தான் அதிகமாக உபயோகிக்கப்பட்டு வருகிறது என்பது நமக்கு தெரியும். இந்த வருஷ வரவு-செலவு திட்டத்தைப்பற்றிய பிரசங்கம் தமிழில் அச்சடித்து கொடுக்கப்பட்டது ஒரு வரவேற்கதக்க விஷயம். அதுபோலவே, கேள்வித் தாள்களும் தமிழில் அச்சடித்து கொடுக்கப்பட்டால், சாதாரணமாக தமிழ்மட்டும் தெரிந்த பெருவாரியான அங்கத்தினர்கள் கேள்விகேட்கும்போதும் தமிழில் கேட்கலாம். அதற்கு பதில் சொல்லக்கூடிய நிலைமையிலும் அங்கத்தினர்கள் இருக்கலாம். இந்த விஷயத்தில் அரசாங்கத்திற்கு ஊக்கமிருந்தபோதிலும், அதை உபயோகப்படுத்தக்கூடிய அளவில் சட்டசபையில் நிலைமையில்லை. ஆங்கிலத்தில் பதில் சொல்லவேண்டிய நிலைமை சட்டசபையில் இருப்பதால், பல அங்கத்தினர்களுக்குப் புரிந்துகொள்ள முடிவதில்லை என்பதை சபையின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். இந்த சபையை எடுத்துக் கொண்டால் நான் 1½ லட்ச மக்கள்கொண்ட தொகுதியிலிருந்து மக்களுடைய பிரச்னையை எடுத்துச் சொல்லக்கூடிய அளவில் வந்திருக்கிறேன். அதுபோலவே லட்சக்கணக்கான மக்களால் வோட்டுபோட்டுத் தேர்ந்து எடுத்து அனுப்பப்பட்ட பல அங்கத்தினர்கள், அந்தந்த தொகுதி மக்களுடைய குறைகளை அவர்களின் சார்பில் மந்திரியிடம் சொல்லவும், மந்திரி

சொல்லும் பதிலைகேட்டு மக்களிடம் சொல்லவும், எப்படி ராமரும் சீதையும் காட்டில் தனித்தனியாக பிரிந்தபிறகு, ராமர் சொல்வதை சீதையிடம் சொல்லவும், சீதை சொல்வதை ராமரிடம் சொல்லவும் அனுமார் இருந்தாரோ, அதுபோல மக்களுக்கும் மந்திரிகளுக்கும் இடையே தொடர்பு உள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆகவே அந்த மக்களுடைய நிலைமையை எடுத்துச் சொல்லவேண்டிய நிலைமையை உண்டுபண்ணி கொடுக்கக்கூடிய அளவில் சபை இருக்கவேண்டுமே தவிர, ஆங்கிலத்தில் சொல்லிக்கொண்டு போனால் உண்மையான கருத்துக்களையும், ஜனநாயக எண்ணத்தையும் வெளியிட முடியாது என்பதை சபையின் ஞாபகத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்." **(Interruption by Sri K. Vinayakam :—' Sir, I protest against the hon. Member's characterization of M.L.As. as Hanumars.** I am not a Hanumar, Sir.') (Laughter.)

Mr. SPEAKER:—" அவர் அப்படி சொல்லவில்லை."

Sri K. VINAYAKAM :—" ராமருக்கும் சீதைக்கும் நடுவே அனுமார் சங்கதிகளை எடுத்துச் சொன்னதுபோல, மந்திரிகளுக்கும் மக்களுக்கும் நடுவே M.L.A.க்கள் சங்கதிகளை கொண்டு போகிறார்கள் என்று சொன்னார். அவர் வேண்டுமானால் ஹனுமாராக இருப்பது பற்றி எனக்கு கவலையில்லை. நான் ஹனுமாராக இருப்பதற்கு தயாராய் இல்லை." (Laughter.)

Sri S. RAMALINGAM:—" கனம் ராஜகோபாலாச்சாரியார், M.L.A.க்களை அனுமார்கள் என்று பல கூட்டங்களில் சொல்லியிருக்கிறார்."

Sri K. VINAYAKAM:—" வெளியே சொன்னார், சட்டசபை உள்ளே சொல்லவில்லை."

Sri A. GOVINDASWAMY NAYAGAR :—" ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் மந்திரிகளை அனுமார்கள் என்று சொன்னாரே தவிர, சட்டசபை மெம்பர்களை சொல்லவில்லை."

Sri S. VADIVELU :—" நான் தவறான கருத்துடன் சொல்லவில்லை. என்னை தேர்ந்தெடுத்த மக்களின் பிரச்னையை மனதில் வைத்துதான் இந்த உதாரணத்தை சொன்னேனே தவிர வேறு கெட்ட எண்ணத்துடன் ஒன்றும் கூறவில்லை. அடுத்தபடியாக தேர்தல் காலங்களில் மந்திரிகள் பல இடங்களுக்கு சுற்றுபிரயாணம் செய்கிறார்கள். இன்றைக்கு இருக்கும் ஜனநாயக முறைப்படி, யார் வேண்டுமானாலும் மந்திரியாகவர முடியும். இன்றைக்கு முதன் மந்திரியாக இருப்பவர் நாளைக்கு சாதாரண பிரஜையாக மாறலாம். என்னைப்போன்ற சாதாரண விவசாயி மகன், தொழிலாளி மகன் நாளைக்கு மந்திரியாக வரமுடியும். அந்த முறையில் சர்வஜன வாக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருக்கும்போது, மந்திரிகள் தேர்தல் காலங்களில் சுற்றுப்பிரயாணம் வரும்போது, காங்கிரஸ் கட்சிக்குத்தான் ஓட்டுப்போட வேண்டுமென்று பிடிவாதமாக பேசுகிறார்கள். இதுதான் ஜனநாயகமா என்று கேட்க விரும்புகிறேன். தேர்தல் காலங்களில் கனம் மந்திரி என்ன சொல்லுகிறார்கள். காங்கிரஸ்காரர்களுக்கு வோட்டுப் போடுங்கள் என்று சொல்லுகிறார்கள். கனம் முதல் மந்திரி அவர்களும் தேர்தல் காலங்களில் காங்கிரஸ் காண்டிடேட்டுகளுக்கு வோட்டுப் போடுங்கள் என்று சொல்லுகிறார். அப்படி பேசும்போது முதல் மந்திரி அவர்கள் பிடிவாதமாகக்கூட பேசுகிறார். குறிப்பாக எடுத்துக்கொண்டால் தஞ்சை ஜில்லாவில் ஜில்லா போர்டு தேர்தல் நடந்தது. அங்கு முதல் மந்திரி சுற்றுப்பிரயாணம் செய்தார். அப்பொழுது அவர் ஏழைகள் இருக்கும் இடங்களுக்குப் போக இல்லை. காலை 8-30 மணிக்கு கருப்பம்பலம் பட்டாமணியம் அவர்கள் வீட்டில் தங்கினார். பகலில் ஏ. எம். செட்டியார் வீட்டில் தங்கினார். இரவு வலிவலம் மனது நயினாத தேசிகர் வீட்டில் தங்கினார். மறுநாள் காலையில் கபிஸ்தலம் மூப்பனார் வீட்டில் தங்கினார். ஏழைகள் இருக்கும் இடங்களுக்கு வரவே இல்லை. மக்களுடைய பிரதிநிதி என்ற முறையில் சுற்றுப்பிரயாணம் செய்யும்போது எல்லா இடங்களுக்கும் செல்லவேண்டும்.

1-10 p.m.

21st March 1955] [Sri S. Vadivelu]

பொதுவாகத்தான் பேசவேண்டும். குறிப்பிட்ட இடங்களுக்கு மட்டும் போகக் கூடாது. அப்படி செய்வதினால், அதிகாரிகள் என்ன நினைப்பார்கள். தாங்களும் அதைதானே கடைபிடிப்பார்கள். அடுத்தப்படியாக எடுத்துக் கொண்டால் சாத்தன்குளத்தில் தேர்தல் நடந்தது. அப்பொழுது கனம் முதல் மந்திரி அங்கு தேர்தல் பிரசாரம் நடத்தினார். நானும் அந்த தேர்தலுக்கு சென்று இருந்தேன். அவர்கள் பேசிய இடத்தில் எல்லாம் நானும் பேசினேன். ஆனால் முதல் மந்திரி காமராஜ் அவர்கள் சாத்தன் குளம் தேர்தல் பிரசாரத்தின்போது அவர் என்ன சொல்லுகிறார். எஸ். பி. ஆதித்தன் அவர்களை வாபஸ் வாங்கிக்கொள்ளும்படி கூட்டத்தில் சொல்லு கிறார். ஜனநாயக ஆட்சி நடக்கும்போது இப்படி வாபஸ் வாங்கிக்கொள்ளு சிறீர்களா என்று சொல்லுவது நியாயமா? இப்படிச் சொல்லுவதற்கு அர்த்தமே இல்லை. ஜனநாயக ஆட்சியில் யார் வேண்டுமானாலும் தேர் தலுக்கு நிற்கலாம். அப்படி நிலைமை இருக்கும்போது முதல் மந்திரி அவர்கள் அவரை வாபஸ் வாங்கிக்கொள்ளவேண்டும் என்று சொல்வதில் அர்த்தம் இல்லை. இது ஜனநாயக முறைக்கு தகுந்தது இல்லை என் பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

"அடுத்தப்படியாக சொல்லும்போது காந்திஜி சொல்லி இருக்கிறார். நம்முடைய நாடு ஒரு வரண்ட பிரதேசம் என்று. ஆயிரக்கணக்கில் உத்தியோகஸ்தர்களுக்கு சம்பளம் கொடுக்கக்கூடாது என்று அன்று சொன் னார் காந்திஜி. ஆனால் இன்று நம் நாட்டில் பார்த்தால் 2,000, 3,000 என்று உத்யோகஸ்தர்களுக்கு சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் ஏழை தொழிலாளர்களுடைய வருமானம் எப்படி இருக்கிறது என்றால் ஒரு நாளைக்கு 8 அணா அல்லது 10 அணாவாகத்தான் இருக்கிறது. நாட்டில் பாதி ஜனங்களுக்குமேல் குடிசையில் வாழும் மக்களாக இருந்து வருகிறார்கள். அப்படி இருக்கும்போது ஆயிரக்கணக்கான ரூபாய் சம் பளம் கொடுக்கவேண்டிய அவசியமே இல்லை. ஆனால் ஜனநாயக முறை யில் அரசாங்கம் நடைபெறுகிறது என்று சொல்லப்படுகிறது. தொழிலாளர் கூலி வேலை செய்தால் 8 அணா அல்லது 10 அணாதான் கிடைக்கிறது. கிராமங்களில் சாப்பாட்டுக்கு இல்லாமல் பட்டினி கிடக்கிறார்கள். சோத் துக்கு வழியில்லாமல் பல குடும்பங்கள் கஷ்டப்படவேண்டிய நிலைமை வளர்ந்து வருகிறது. தினேதினே வேலை இல்லா திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது. நேற்றுகூட பண்டிட் ஜவஹர்லால் என்ன சொல்லி இருக் கிறார். சென்னை ராஜ்யத்தில்தான் அதிகப்படியான வேலையில்லா திண் டாட்டம் இருக்கிறது என்று. இங்குதான் நாளுக்கு நாள் வேலையில்லா திண்டாட்டம் அதிகரித்துக்கொண்டு வருகிறது. அவரே இப்படிச் சொல்லி இருக்கிறார் என்று சொன்னால் நமது மாகாணத்திலுள்ள மந்திரிகள் வேலையில்லா திண்டாட்டத்தைப்பற்றி எதுவும் சொல்வது இல்லை. சர்க்கார் காரியாலயங்களில் எல்லாம் கட்சி பாகுபாடு இருக்கக்கூடாது. கட்சி வேற்று மையும் காட்டக்கூடாது. குறிப்பாக இதைப்பற்றி சொல்ல ஆசைப்ப கிறேன். சென்ற இரண்டு வருஷங்களாக ஒரு கேள்விக் கேட்டுக்கொண்டு வருகிறேன். வலிவலத்தில் ஒரு கோவில் இருக்கிறது. அதற்கு 200, 300 ஏக்கர் நிலம் இருக்கிறது. அதற்கு டிரஸ்டி யார், அந்த நிலங் களுக்கு மானேஜர் யார் என்பதைப்பற்றியெல்லாம் கேட்டுக்கொண்டு வரு கிறேன். அதற்கு இதுவரையிலும் எந்தவிதமான பதிலும் வரவில்லை. எனக்கு வரும் கடிதங்கள் எல்லாம் ஆங்கிலத்தில்தான் வருகின்றன. அதில் என்ன எழுதி இருக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை. அதை பற்றிக் கேட்டால். . . ."

Mr. SPEAKER:—"அது வேறு விஷயம். அதற்கும் இப் பொழுது விவாதத்தில் இருப்பதற்கும் சம்பந்தம் இல்லை. அதைப்பற்றி இங்கு பேசக்கூடாது."

Sri S. VADIVELU:—"இந்த முறையில் காரியாலயங்கள் நடக் கின்றன. இப்பொழுது ஹரிஜன் வெல்பேர் கமிட்டி ஒன்று அமைத்து வேலை நடந்துகொண்டுவருகிறது. ஒவ்வொரு ஜில்லாவிலும் அந்த கமிட் டியில் காங்கிரஸ்காரர்களைமட்டிலும் போடப்பட்டிருக்கிறது. சகல கமிட்டி களுக்கும் சகல மக்களின் வரிபணம்தானே செலவழிக்கப் படுகிறது. அப்படி

யிருக்கும்போது என்போன்றவர்களையும் அந்த கமிட்டியில் போட்டால் என்ன. கட்சி பாரபட்சம் காண்பிப்பதேன். இதுதான் ஜனநாயகமா என்று கேட்க ஆசைப்படுகிறேன். இனிமேலாவது அதுபோன்ற கமிட்டியில் எல்லோரையும் சேர் பதற்கு சர்க்கார் முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது இருக்கும் கமிட்டியில் காங்கிரஸ்காரர்களைத்தான் எடுத்து கொள்ளுகிறார்கள். நாங்களும்தான் ஹரிஜனங்களுக்கு வேலை செய்து வருகிறோம். எந்த கட்சியாக இருந்தால் என்ன ? ஜனங்களின் சேவையே பிரதானமே தவிர வேறு எதுவும் இல்லை. அப்படி சேவை செய்வது தான் ஜனங்களுக்கு ஒரு நம்பிக்கை ஏற்படும். அதை விட்டுவிட்டு பத்திரிகை பிரசாரத்தால்மட்டும் நன்மை செய்துவிட முடியாது. உண்மையிலேயே நல்லெண்ணத்துடன் ஹரிஜனங்களுக்கு சேவை செய்வதில் பங்கெடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதனால் எங்களையும் அந்தக் கமிட்டியில் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அந்த அளவில் எங்களுக்கு பரிகாரம் தேடிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்."

SRI K. T. RAJU:—" நாங்கள் எல்லோரும் தமிழில்தான் பேசினோம். அதனால் நீங்களும் தமிழில்தான் பேசவேண்டும்."

* RAJA MUTHIAH CHETTIAR of CHETTINAD :—" நான் தமிழில் பேசினால் அது பேப்பரில் வராது. அதை சரிவர பேபரில் போட மாட்டேன் என்கிறார்கள். அதனால்தான் ஆங்கிலத்தில் பேசுகிறேன். கனம் மந்திரிகள் தமிழில் பேசினாலும் அவைகளை பூராவும் பேபரில் போடுவது இல்லை. இப்படி இருக்கும்போது நான் பேசினால்மட்டும் எப்படி போடுவார்கள். அதற்காகத்தான் நான் தமிழில் பேசவில்லை.

" Mr. Speaker Sir, while I speak on this Demand, it should not be understood that I speak about anything other than a vote of confidence in the Ministry, sitting as I do, behind the Treasury Benches. The Government have done very nice things under the leadership of our Chief Minister. I said, during the general discussion on the Budget, that the Hon. the Minister for Finance explained the financial position of the Government as lucidly as possible and probably in a much better way than last year. If I was not able to refer to any other matter on that occasion, it was because I had no time to do so. This Demand is a comprehensive Demand and I hope to refer to all matters which I could not refer to earlier.

" Sir, we are, situated as we are now, very near the close of the Five-Year Plan. The second Five-Year Plan is in the offing and we must follow a dynamic policy in formulating schemes under this Plan. As I have already said, other States have not resorted to taxation this time but merely presented Budgets showing deficits or asking for assistance even to the extent of thirty and forty crores of rupees from the Central Government. The Central Government have explored all possible avenues of taxation and if they have omitted any, the States have taped those sources of revenue. We must be very serious about the Second Five-Year Plan. Of course, the Hon. the Finance Minister said that the House would be given an opportunity to discuss the second Five-Year Plan. I hope when it is placed before us, it will not be the penultimate hour. I am sure it will be placed before us in time so that the Plan may be considered not only at the Government level but by the House also. We may be meeting again in June or July next and I hope we will discuss the Plan during that sitting of the House. Then, Sir, it is

21st March 1955] [Raja Muthiah Chettiar of Chettinad]

not enough if the House alone discusses it. The public should be given a chance to know what it is and discuss it. Then alone, the Plan should be finalized.

"Sir, coming to details of the Plan, under Irrigation, there is provision for only twenty-five crores of rupees in the second Five-Year Plan. It should be two hundred and fifty crores of rupees. I do sincerely hope that the provision will be revised in such a way as to provide for the taking up of major schemes in undeveloped areas. There are places which are not capable of development in the field of irrigation. But there are others which are capable, if not with major schemes at least with minor things. As has been very rightly pointed out by the Government sub-soil water has to be tapped. Tube-wells have to be sunk and more electricity schemes have to be drawn up. In this connection, I urge the Government to take up the Coorg scheme at once. After all construction of dams is not a work to be completed in the Plan period. They may require not one Five-Year Plan but two or three. Possibly, we may require a Fifteen-Year Plan. All that needs to be done is, we must start a pilot scheme to survey all available resources that can be tapped. Unless there is such a survey conducted with the help of the Chief Engineer, we cannot make much headway. For instance, there is no senior engineer in Coorg to study the potentialities of the Coorg scheme. By survey, I do not mean measurement of the area, etc., concerned with the projects. Madras has engineers who can do such work very well.

"I have already referred to electricity schemes. There are three backward places for instance in the south, though generally they are supposed to enjoy good irrigation facilities. I refer to Tanjore, Tiruchirappalli and Dindigul. The north of the railway line is green like the cushions here and the south of it has no water. I particularly refer to places like Pattukkottai and Gandarvakottai. The Government have promised a Development Board and it is yet to come. We want electricity schemes for these areas. We see for places like the Uttar Pradesh and East Punjab the target fixed is 2,000 tube-wells plus many electricity schemes. When it comes to Madras, it is only 200 tube-wells and no electricity scheme. I hope the Government will devote their full time and energy to this question and see that they get a decent allocation from the Centre. I am particularly happy to see that two days ago the Prime Minister of India, Mr. Nehru, has given prominence to the unemployment of the educated in Bengal and Madras. Our Engineers and our experts are not being absorbed in North India to-day. They are not welcomed in the North. May be the saturation point has been reached. The cause may be that in the North also, young men have qualified themselves and are being employed, leaving no scope for our experts to seek employment there. The position to-day is not what it was some fiften years ago when it was possible for our engineers and experts to get absorbed in Tatanagar, Kharagpur and other places. So it is necessary to think of the regionalization of industry. More industries should be located in the South. This Government of Madras should urge on the Central Government to set up regional

1-20 p.m.

[Raja Muthiah Chettiar of Chettinad] [21st March 1955

institutes and industries in the South. May be Neiveli experiment may fructify and then it must be possible to locate a large number of small-scale industries around it. I am glad that the Hon. Finance Minister, piloting this demand, is also the Minister in charge of Education. I do hope that he would consider what I had said and that he would urge upon the Central Government to locate the regional research institute in South Arcot district, in view of the fact that the Neiveli project is there. If research institute were to be set up in South Arcot, near the Neiveli project, I think it will be an auxillary and a proper adjunct to the Neiveli group of industries that are likely to crop up, once the Neiveli experiment fructifies. Groundnut and sugar are two important things in South Arcot. Nothing else is possible there. Therefore I want that one of the research institutes should be located there. I am sure the Hon. Minister for Education would lose no time in urging upon the Centre the necessity of their establishing the research institute in South Arcot. The Government of India are prepared to spend Rs. 50 to Rs. 60 lakhs for the institute. South Arcot would be proud to have such a research institute. I do hope the Education Minister would take serious note of what I had said and do the needful. That will go a long way in solving the unemployment of the educated in this State. I do hope and trust that the setting of research institute on a regional basis would be given serious consideration.

" Mr. Speaker, this House has been accustomed to hear speeches on Housing, especially poor-class housing. I am happy to note that the Hon. Finance Minister while replying to the Police Demand has said that they were hoping to get Rs. 4 crore loan from the Centre for providing the policemen in the State with houses. It is better instead of being given the house-rent allowance, these policemen, who belong to the last category in the heirarchy of police officials, are provided with houses to live in. Incidentally it will solve the housing problem. The policeman comes from the last rank. It is good and proper that he should be provided with a house. I do hope Government would think of another such housing scheme in respect of peons, menials and other subordinates in the City, Madurai, Tiruchirappalli and other big towns. What is happening with regard to the Industrial Housing Scheme? Government pay Rs. 1,100, for a construction which will cost Rs. 2,700 and odd. Rupees 1,600 should be spent by the industrialist. It is not possible for all industrialists to pay for each construction Rs. 1,600. I have seen for myself this two-room tenement. It is heartening to note that Mr. Nehru himself has said that no idea of one-room tenement could be entertained hereafter but that we should hereafter think only of two-room tenement. It is absolutely necessary that there should be two rooms, a kitchen and a bathing place. Such a construction will come to four thousand rupees. What the Government say is that they will bear one-fourth of the cost. They ask the industrialist to pay three-fourths of the cost. The Industrial Housing Scheme is confined to certain organized industries. For instance take the case of textile industry. It is possible for the industrialists in that industry to provide housing

21st March 1955] [Raja Muthiah Chettiar of Chettinad]

accommodation to their workers on the lines suggested by the Government of India under their Industrial Housing Scheme. But I want the scheme to be extended to other industries also, by making certain exemptions. Suppose there is an industry wherein about 20 people are employed. For that employer employing 20 workers, it is not possible to invest three-fourth of the cost of construction of houses for his workmen. Only if he invests three-fourths of the cost, the help of Government of India under their scheme to provide houses for industrial labour, could be got. We have been asking the Government of India to relax their rule, with regard to small-scale industries. Let them give half as loan and half as grant. Let them give subsidy. It is not enough if the Corporation of Madras or some other body asks for such a help. The Government of Madras should make it a point to recommend to the Central Government that so far as small industrial concerns are concerned, the Central Government might relax their rule and they may give exemption. There are a number of labourers in Madras who work for about four or five years. Afterwards they are discharged. But all the same he is a labourer and therefore it is necessary that he should be provided with a house to live in. There is no provision by which these labourers could be housed. The Government of Madras must recommend to Central Government to encourage bodies like the Corporation of Madras and the City Improvement Trust, who are engaged in clearing slums and providing houses for labourers, and other poor-class people. There are several classes of labourers who are employed in several industrial concerns. Even though they are not employed in a big industry, like the Textile Industry, it is necessary, that even though their employers are not able to provide them housing accommodation under the Industrial Housing Scheme, the Government of Madras should recommend to the Central Government to make the necessary exemptions in the rules, in the case of these workers employed in small industrial concerns, so that they might be provided with houses.

"It is very distressing to note that the Government of Madras, even though they have thought that the City Improvement Trust must continue and render the useful service which it is at present rendering to the public, are considering to withhold the grant of Rs. 2½ lakhs which they are giving to the City Improvement Trust annually. It did not stop with this. It has its repurcussions. I understand that the Corporation also which is to contribute Rs. 2½ lakhs to the Trust annually under the Act, is thinking of withholding its grant. Giving Rs. 40,000 or Rs. 50,000 or a lakh is a pittance. I am further told that the City Improvement Trust have been constructing only poor-class houses for the past three years. No doubt formerly, five or six years before, they were engaged in acquiring big plots and building big bungalows costing Rs. 30,000 and Rs. 40,000. Now they have made it clear that they would be hereafter engaged only in slum clearance and in building and constructing poor-class houses. I do hope that the Government of Madras would continue their usual grant. They should in fact give

[Raja Muthiah Chettiar of Chettinad] [21st March 1955

more loans and more grants to the City Improvement Trust for continuing the good work which the Trust is doing. I am glad that the Government are giving some money to the Corporation of Madras in regard to the subject of 'housing',. The housing problem has not been tackled in a big way by the Madras Government. That has been my experience as a Member of the Legislature for the past 35 years, right from 1920. From 1920 up to now, people have not understood the difficulties of the Corporation and the City Improvement Trust. (The Hon. Sri C. Subramaniam: All ex-Mayors are here.) Ex-Mayors may be here. But they are ineffective. (An hon. Member: You are on the Congress side.) We are here in the Congress side to support the Ministry. At the same time it is true that we are not able to be as critical as we would like to be. We could only appeal to Government. Therefore I appeal to Government to provide the Corporation and City Improvement Trust with more funds, so that our City which is already clean could be made cleaner still. If only Rs. 2 crores is immediately spent, I think within one or two years, the Corporation and the Trust could tackle this problem. Of course the Co-operative Housing Societies are there. My friend Mr. Venkatasami Naidu being in the Modern House Construction Society has done some very good work. But the Co-operative Housing Societies always work taking into account the return they expect. But so far as Government are concerned, it is their duty to see that next to food and clothing, housing is more important. They should therefore see to it that housing accommodation is provided for the needy. I do hope they would try to get the necessary financial help from the Government of India and help these two bodies, viz., the Corporation and the City Improvement Trust, so that the 'housing problem' in Madras City could be solved. The Government of India would relax their rule if only the State Government take into their heads and impress on the Central Government."

SRI M. PALANIYANDI :—" இப்பொழுது இருக்கக் கூடிய இன்ட்ஸ்டிரியல் ஹௌசிங் ஸ்கீம் முறைப்படி மத்திய அரசாங்கம் 50 சத விகிதமும் மாகாண அரசாங்கம் 25 சத விகிதமும் கொடுத்து வருகிறார்கள். மாகாண அரசாங்கம் 25 சத விகிதம் சப்சிடியாகக் கொடுத்து வருகிறார்கள். அதை வைத்துக்கொண்டுதான் நமது அரசாங்கம் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்."

* RAJA MUTHIAH CHETTIAR OF CHETTINAD :—" Sir, I do not know the correctness of what the hon. Member had stated. I would only commend it for the consideration of the Hon. Minister in charge of it. I am sure that with the backing of the Madras Government, the Central Government would be persuaded to allot Rs. 1 crore or two, so that more houses could be put up.

" I want to refer to another important point. I referred to the question of Service Commission during my budget speech. It was a pity I could not be present in the House when the Hon. Finance Minister replied to the budget discussion. But I perused the newspapers. I perused the *Hindu*, dated 6th or 7th instant. I did not find any reference to it in the Minister's reply. May be the Hon.

21st March 1955] [Raja Muthiah Chettiar of Chettinad]

Finance Minister had not the time to reply to that point, because of the enormity of points he had to cover, or may be that had gone unreported. But I do hope that had the Minister replied to that point, it would have been published. Probably he has not replied. Or if he has really replied, I would apologise to him.

"The question of Public Service Commission is not a new thing for us. It is not like an administrative Board like the Board of Revenue which we could think of abolishing when we think that it has not turned out good work. It is not such an administrative body. The Public Service Commission is the safety-valve to protect the rights of the public services. No doubt there are other Tribunals also. The record of our Public Service Commission has been great indeed. The manner n which it has discharged its functions is certainly praiseworthy. Right from the time of Norman Marshbanks, who was the first Chairman, we have had a succession of worthy Chairmen."

MR SPEAKER :—"இப்பொழுது மணி 1-30 ஆகிவிட்டது. 'பசி வந்தால் பத்தும் பறந்து போகும்,' ஆனால் நீங்கள் பேசிக்கொண்டேயிருக்கிறீர்கள்."

RAJA MUTHIAH CHETTIAR OF CHETTINAD :—"It may be that the advice tendered by the Public Service Commission is inconvenient for the Government. But the Government have to bear with it. If they find that the Members of the Public Service Commission are not up to the mark, when the time comes, they can change the Members. But as long as they are satisfied with the capability of the Members, they should accept their advice. It may be that one out of ten suggestions of the Commission is not acceptable or convenient for the Government. But all the same they will have to accept it. I hope that the Government will in this way keep up the prestige of the Public Service Commission." 1-30 p.m.

* SRI K. T. RAJU :—"சபையில் பேசும்போது கனம் செட்டியார் அவர்கள் சொன்னார், 'தான் தமிழில் பேசினால் அது பேபரில் வராது என்றும் மந்திரிகள் தமிழில் பேசினால்கூட பேபரில் வருவது கஷ்டமாக இருக்கிறது' என்றும் குறிப்பிட்டார். அவர் தவறாக நினைத்துக்கொண்டு அப்படி சொல்லுகிறார் என்று நான் நினைக்கிறேன். அவர் இங்கு பேசும் விஷயங்கள் எல்லாம் பேபரில் வருவதற்காக பேசுகிறாரா அல்லது பொது ஜனங்களுடைய நன்மைக்காக பேசுகிறாரா என்பது விளங்கவில்லை. தமிழில் பேசினால்தான் அது பொது ஜனங்களுக்குத் தெரியும். பேபரில் வருவது மட்டும் என்பது இல்லை."

MR. SPEAKER :—"The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow."

The House then adjourned.